ISSN: 2012 - 6352

# தொண்டன்

ஆரம்பம் 1969 பெப்ரவரி

சமய – சமூக – இலக்கிய வெளியீடு

30/=




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

ஜூலை - 2013


மலர் - 45 இதழ் - 06

• **ஆசிரியர்**
லெஸ்லி ஜெயகாந்தன்

• **இணை ஆசிரியர்**
மலர்வேந்தன்

• **துணை ஆசிரியர்கள்**
மெற்றில்டா இராஜேந்திரம்
பெஸ்லீயோ வாஸ்
பைந்தமிழ்க்குமரன் டேவிட்

• **ஆலோசகர்**
A.G.இராஜேந்திரம்

• **கணினி வடிவமைப்பு**
சுபாஜெனி சங்கர்

• **வெளியீடு**
சமூகத் தொடர்பு நிலையம்.
மட்டக்களப்பு மறை மாவட்டம்

• **முகவரி**
சமூகத் தொடர்பு நிலையம்
அ.பெ.எண் - 44
மட்டக்களப்பு.

• **பதிப்பகம்**
வணசிங்கா அச்சகம்
மட்டக்களப்பு.


## உள்ளே....




அன்புடன் உங்களோடு .................. 01
ஓராண்டு நிறைவில் ........................ 02
வளர்ச்சிப் பாதையில் ...................... 03
மட்டக்களப்பில் நடைபெற்ற ......... 05
நம்பிக்கையாய் இரு ........................ 08
கிழக்கில் கிறீஸ்தவம் .................... 09
கவிதைகள் ........................................ 13
மாணவர் பக்கம் .............................. 14
தொண்டனின் சில ........................... 15
புனிதர்களின் வரலாறு .................... 18
குருத்துவ வாழ்வில் .......................... 19
இலக்கிய மஞ்சரி .............................. 20
பன்மைத்துவத்தின் பெறுமதி ........ 22
பெரிய புல்லுமலை ........................... 23
தமிழில் கிறிஸ்தவ ........................... 25
விவிலியம் கற்போம் ........................ 27
அறிவை வளர்ப்போம் ..................... 28


ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ-ர்)


SOCIAL COMMUNICATIONS CENTRE
P. O. BOX - 44
BATTICALOA.
TEL: 065 - 2226486
E.mail: scctribatti@gmail.com


விலை : 30/=
ஆண்டு சந்தா : 500/=
(தபாற் செலவு உட்பட)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**இறைவாக்கு**

“வேறொருவருடைய வீட்டு வேலையாளிடம் குற்றங் காண்பதற்கு உங்களுக்கு என்ன உரிமை இருக்கிறது...? அவர் நன்கு செயலாற்றுகிறாரா இல்லையா என்பது அவர் தலைவரின் பொறுப்பு. அவர் நன்குதான் செயல்படுவார். ஏனெனில் தலைவர் அவரை நன்கு செயல்பட வைக்க முடியும்” (உரோ 14:4)

# அன்புடன் உங்களோடு....!

பல ஆண்டுகளுக்குப் பின் பாப்பரசர் 16ம் ஆசீர்வாதப்பரால் 2012ம் ஆண்டு ஜூலை 3ம் திகதி திருகோணமலை, மறை மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்டு, (திருகோணமலை - மட்டக்களப்பு) மட்டக்களப்பு தனிமறைமாவட்டமாகப் பிரகடனப்படுத்தப்பட்டு இன்று ஓராண்டு பூர்த்தியடைந்த பெருமகிழ்வில் நாம் திளைத்து நிற்கின்றோம்.

இன்று எம் ஒவ்வொருவருக்கும் உள்ள கடமையும் கடப்பாடும் என்ன வென்றால், எமது மறைமாவட்டத்தை மேலும் சிறந்த முறையில் வளர்த்தெடுப் பதாகும். மறைமாவட்டம் எமக்கு என்ன செய்தது என்று நினைப்பதைவிட மறைமாவட்டத்திற்காக நாம் என்ன செய்யப்போகின்றோம் என்ற முனைப்போடு வாழ நாம் முன்வர வேண்டும்.

ஜார்ஜ் குல்திப்திவ் என்ற அறிஞர்,

“நீங்கள் எதைத் தருகின்றீர்களோ அது உங்களுடையது.

எதை வைத்திருக்கிறீர்களோ அது மற்றவர்களுடையது” என்கிறார்

எனவே, மற்றவர்களுடைய சொத்துகளுக்கும் உடைமைகளுக்கும் உரிமை கோராமல் உன்னிடமிருப்பதை பிறர் நல வாழ்விற்காகக் கொடுத்திட முன்வர வேண்டும். பிறருக்குக் கொடுப்பவன் மனிதன், பிறரிடமிருந்து எடுப்பவன் அயோக்கியன். திரைப்படப்பாடல் ஒன்று அழகாகச் சொல்கின்றது:

“எவன்தான் மனிதன்,
பிறருக்காகக் கண்ணீரும்
பிறருக்காகச் செந்நீரும் சிந்துபவனே மனிதன்.....”

எனவே, நாம் வாழும்போது, மனித மாண்பைப் பேணுபவர்களாக, மனிதர்களை மதித்து வாழ்பவர்களாக இருக்க வேண்டும்.

எமது மறைமாவட்டத்திற்கு வயது ஒன்றேயாகின்றது. இம்மறைமாவட்டத் தின் வளர்ச்சிக்காக உழைப்பவர்களை நாம் உயர்த்தவேண்டுமே தவிர அவர்களது செயற்பாடுகளுக்கு முட்டுக்கட்டைகளாக இருக்கக்கூடாது.

பிறருடைய முன்னேற்றத்திற்கும் பிறருடைய வாழ்வை சீரழிப்பதற்கும் பிறருடைய பெயரைக் கெடுப்பதற்கும் உறவுகளைப் பிரிப்பதற்கும் செயற்படும் கிருமியாக மனிதர்கள் மாறிக்கொண்டிருக்கிறார்கள். இந்நிலை ஒழியவேண்டும்; அழிக்கப்பட வேண்டும். மனிதன் மிருகமாக அல்ல, மனிதனாக வாழ அழைக்கப்படுகின்றான்.

இன்று ஓராண்டு நிறைவுகாணும் எமது மறைமாவட்டத்தின் வளர்ச்சிப் பாதைக்கு நாம் உதவிட முன்வருவோம். இன்று எமது மறைமாவட்டம் வறுமை நிலையில் உள்ளது. இவற்றிலிருந்து நாம் விடுபட வேண்டுமென்றால் நாம் எதிர்நீச்சல் போட்டே ஆக வேண்டும். பல தடைக்கற்களைத் தாண்டினால்தான் நாம் சவால்களை எதிர்கொள்ள முடியும்.

லெனின் சொல்கிறார்:

“முன்னேற வேண்டுமென்கிற ‘துடிப்பு’ உருவாகிவிட்டால்,

வறுமை போன்ற இன்னல்கள் தடைக்கற்களாக இருக்காது” என்று...

எனவே, பல இன்னல்களுக்குள் இறுகி இருக்கும் எமது மறைமாவட்டத்திற் காகவும் நாட்டிற்காகவும் மன்றாடுவோம். இவற்றின் வளர்ச்சிக்காக உழைக்க நாம் முன்வருவோம். இதற்காக பாடுபடும் எமது ஆயர், குருக்கள், துறவிகள், பொதுநிலையினர் அனைவருக்காகவும் மன்றாடுவோம்.

இறைவன் என்றும் இவர்களோடு இருக்க பிரார்த்திப்போம்.

— ஆசிரியர் —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஓராண்டு நிறைவில் ...

மாண்புறு மட்டக்களப்பு மறைமாவட்டந் தோன்றி
ஆண்டொன்று நிறையும் அகமகிழும் மனது
வேண்டிய பலகால விருப்புகள் முயற்சிகள்
வீணாகிப் போகுமோ இல்லையிலை விடிந்தது
ஆண்டிரண் டாயிரத்துப் பன்னிரெண்டு ஜூலை
மூன்றாம்நாள் கிடைத்த முத்தான செய்தியது
ஆண்டவரின் அருளால் அருளப்பட்ட நற்செய்தி
புதியமறை மாவட்டமாய்ப் புலர்ந்தது மண்ணில்

மண்ணின் மைந்தராய் மறைமாவட்ட முதல்
ஆயராய் அமர்ந்தார் ஆண்டகை பீ. யோசேப்பு
எண்ணரிய மகிழ்ச்சி எல்லோர்க்கும் கொண்டாட்டம்
கூடவே அன்னை மரியாஇணைப் பேராலயம்
வண்ணக் கோலம்பூண்டு மறைமாவட்டப்பே
ராலயமாய் உயர்ந்தது உள்ளமோ நிறைந்தது
சுண்ணங் கலந்தநீர் சுந்தரமாய்ப் பொழிந்ததுபோல்
சூழ்ந்தது அழகு மகிழ்ச்சியெங் கணுமே!

எல்லைகள் குறைந்தாலும் இரண்டுமறைக் கோட்டங்கள்
இயக்கத்தில் துடிதுடிப்பு ஆன்மீக விழிப்புணர்வு
இல்லங்கள்தோறும் தரிசிப்பு இளைஞர்கள்
இலக்கோடு முன்னேற எடுப்பான வழிகாட்டல்
பல்லின மக்கள்வாழும் பாங்கான பூமியதில்
நற்செய்தி யாய்வாழ நயமான திட்டங்கள்
எல்லோரும் ஒற்றுமையாய் ஏற்றமுற வாழ்ந்திடவே
எங்கள்மறை மாவட்டம் எழுந்துமுன் நடக்குமே!

புத்துலகு படைக்கும் புரட்சிமிகு பணிதனில்
புதியமறை மாவட்டமும் புகழோடு நடக்க
எத்தனை தடைகள் குறைகளில் லாமைகள்
இருந்தாலும் என்ன "இறைவன் நம்மோடு"
சத்தான நம்பிக்கை நமக்குண்டு ஆயர்
குருக்கள் துறவியர் குடிமக்கள் எல்லோரும்
நித்தமும் ஒன்றாய் உறுதியாய் நடப்போம்
நிமிர்வோம் வாழ்கநம் மறைமாவட்டம்!



– இன்பம் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**1893**ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 25ம் நாளன்று, அப்போதைய திருத்தந்தை 13ம் சிங்கராயர் யாழ் மறைமாவட்டத்தில் இருந்து திருகோணமலை மறைமாவட்டத்தை உருவாக்கினார். மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை நிர்வாக மாவட்டங்களை உள்ளடக்கியதாக திருகோணமலை மறைமாவட்டம் அமைந்திருந்தது. பின்னர், 1965ம் ஆண்டு முதல் திருகோணமலை-மட்டக்களப்பு மறைமாவட்டம் என அழைக்கப்படத் தொடங்கியது. இவ்வாறு 119 ஆண்டுகால வரலாற்றைக் கொண்ட இம்மறைமாவட்டமானது, 2012ம் ஆண்டு யூலை மாதம் 3ம் திகதியன்று திருகோணமலை-மட்டக்களப்பு மறைமாவட்டத்திலிருந்து, 'மட்டக்களப்பு மறைமாவட்டம்' என்ற புதிய மறைமாவட்டம் உண்டாக்கப்பட்டது. இதனை எமது முன்னைநாள் திருத்தந்தை 16ம் ஆசீர்வாதப்பர் பிரகடனம் செய்துவைத்தார்.

# வளர்ச்சிப் பாதையில் ஓராண்டு நிறைவு காணும் மட்டக்களப்பு மறைமாவட்டம்



மட்டக்களப்பு மறைமாவட்டமானது, அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய நிர்வாக மாவட்டங்களை உள்ளடக்கியுள்ளது. சுமார் 11,30,000 மக்கள் தொகையையும் 45,000 கத்தோலிக்கர்களையும் உள்ளடக்கிய இம்மறை மாவட்டத்தின் நிலப்பரப்பளவானது, 7260 சதுரகிலோமீற்றர் ஆகும்.

இப்புதிய மறைமாவட்டம் உண்டாக்கப்பட்டதனால் எமக்கு நான்கு பெரிய மகிழ்ச்சியான நிகழ்வுகள் ஏற்பட்டன.

1. ஒரு புதிய மறைமாவட்டம் உண்டானமை
2. மறைமாவட்ட முதல் ஆயராக இப்பிரதேசத்தைச் சேர்ந்த பேரருட்திரு ஜோசப் பொன்னையா ஆண்டகை ஆயராக நியமிக்கப்பட்டமை.
3. தூய மரியாள் இணைப்பேராலயம் பேராலயமாக உயர்த்தப்பட்டமை
4. இலங்கையில் கத்தோலிக்கர்களை அதிகம் கொண்ட மறைமாவட்ட எண்ணிக்கை ஒன்றால் அதிகரிக்கப்பட்டமை.

வடக்கே வெருகல், தெற்கே பொத்துவில், கிழக்கே வங்காளவிரிகுடா, மேற்கே புனாணை-புல்லுமலை-அம்பாறை ஆகிய ஊர்களை எல்லையாகக் கொண்டுள்ள மட்டக்களப்பு மறைமாவட்டமானது மட்டக்களப்பு, கல்முனை என்னும் மறைக் கோட்டங்களை தன்னகத்தே கொண்டுள்ளது.

இவ்வருடம் யூலை மாதம் 3ம் திகதி ஒரு வருட பூர்த்தியைக் கொண்டாடும் இம் மறைமாவட்டம் பல்வேறு சவால்களுக்கு

- பெல்ஸியா பால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மத்தியிலும் மறுமலர்ச்சிகள் சிலவற்றை எட்டி யுள்ளமை குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக, பொதுநிலையினரின் பங்களிப்பு மிகுதியாக உணரப்பட்டு, முதலாவது மறை மாவட்ட மேய்ப்புப்பணிச்சபை மாநாட்டில் ஐந்தாண்டுத் திட்டமொன்று முன்மொழியப்பட்டது. இது படிப்படியாக அமுலாக்கம் செய்யப்பட்டு வருகின்றது.

அகில உலக ரீதியில் திருத்தந்தையால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள "நம்பிக்கையாண்டு"க் கான செயற்பாடுகள் சகல மட்டங்களிலும் அமுலாக்கம் செய்யப்பட்டு வருகின்றன.

குறிப்பாக, ஆயரின் இரண்டு சுற்றுமடல்க ளும், மட்டக்களப்பு மறைமாவட்ட திருச்சபையின் மறுமலர்ச்சிச் செயற்றிட்டங்களை புலப்படுத்து கின்றன. 30.09.2012 அன்று வெளியிடப்பட்ட 'மட்டக்களப்பு புனித மரியாள் பேராலயம் - புனித அந்தோனியார் திருத்தலம்' என்னும் தலைப் பிலான திருமடல் மூலம் புளியந்தீவு அந்தோனியார் ஆலயம் திருத்தலமாக்கப்பட்டது.

21.04.2013 அன்று வெளியிடப்பட்ட 'மட்டக்களப்பு மறைமாவட்ட அருங்கொடை வழிபாட்டுக் கூட்டங்கள் பற்றிய சிறப்பு மடல்'. இம் மடல்மூலம் அருங்கொடை வழிபாட்டுக் கூட்டங் கள் தொடர்பான செயற்பாடுகள் முறையாக வழிநடத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆயர் அவர்களின் பங்குத் தரிசிப்புச் செயற்பாடுகள் காத்திரமான முறையில் முன் னெடுக்கப்பட்டு வருகின்றன. ஒரு முழுநாளும் ஆயர், பங்குமக்கள், பக்திச் சபைகள் ஆகியோ



ரைச் சந்திப்பதில் ஈடுபடுவதால் பங்கு-பங்கு மக்கள்-கத்தோலிக்கத் திருச்சபை உறவுகள் பலப்படுத்தப்பட்டு விசுவாச வளர்ச்சி மேலோங்கு கின்றது.

கல்முனை மறைக்கோட்டத்தை மையப் படுத்தி மறைக்கல்வி நடுநிலையம் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. மறைமாவட்ட ரீதியில் மறைக்கல்விச் செயற்பாடுகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன.

சமூகத் தொடர்பு நிலையத்தின் பணிக ளும் அகலப்படுத்தப்பட்டுள்ளன. அண்மையில் தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாரின நூறாண்டு நிறைவையொட்டி மாணவர்கட்கான சிறப்புக் கருத்தரங்கு நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



இது தவிர, சகல ஆணைக்குழுக்களும் மறுசீரமைக்கப்பட்டுள்ளன.

சிறிய குருமடத்திற்கு தரம் ஒன்பதில் கற்கும் மாணவர்களும் இணைக்கப்பட்டுள்ள னர். இதன்மூலம் குருமட மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலாக, மட்டக்களப்பு மறை மாவட்டத்தின் 'கரித்தாஸ் எகெட்' நிறுவனம் ஆயரின் வழிகாட்டுதலின் கீழ், பல்வகையான மனிதநேயப் பணிகளை மேற்கொண்டு வருகின்றது.

எனவே, புதிய மறைமாவட்டமானது சகல வயதுப் பிரிவினரையும் மையப்படுத்தி செயற்பட்டு வருகின்றதென்றால் அது மிகையாகாது. அது மட்டுமல்ல, இன, மத, மொழி, பிரதேச வேறுபாடுக ளையும் கடந்து சமூகப் பணி புரிந்து வருகின்றது.

எனவே, மட்டக்களப்பு மறைமாவட்டத் தின் ஓராண்டு நிறைவையொட்டி மறைமாவட் டத்தின் ஆயர் பேரருட்திரு. ஜோசப் பொன்னையா ஆண்டகை அவர்களையும், குருமுதல்வர், குருக் கள், துறவியர் பொதுநிலையினர் அனைவரையும் **'தொண்டன்'** வாழ்த்தி நிற்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மட்டக்களப்பில் நடைபெற்ற நூற்றாண்டு விழாக் காணும் தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளார் நினைவுக் கருத்தரங்கு

உலகெங்கும் தமிழ்த்தூது சென்று தமிழன்னையின் சிறப்பையும் செழுமையையும் பல நாட்டவரும் அறியவைத்தவரும் -

உலகத் தமிழாராய்ச்சி மன்றத்தை நிறுவி, தமிழ் ஆய்வை அனைத்துலக மட்டத்திற்கு எடுத்துச் சென்றவரும் -

உலகத் தமிழாராய்ச்சி மாநாடுகள் நடைபெற பெரிதும் முன்னின்று உழைத்தவரும் -

தமிழ்மொழியும் - தமிழரது வாழ்வும் மேன்மையுற உழைப்பதையே தம் வாழ்வின் இலட்சியமாகக் கொண்டு இறுதிவரை வாழ்ந்தவருமான தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாரது நூற்றாண்டுவிழா தமிழர் வாழும் நிலமெங்கும் கொண்டாடப்பட்டு வருகின்றது.


மட்டக்களப்பிலும் நூற்றாண்டு விழா நிகழ்வுகளின் முதல் அடியாக மட்டக்களப்பு மறைமாவட்ட சமூகத்தொடர்பு நிலையமும் கிறிஸ்தவக் கலை இலக்கியப் பேரவையும் இணைந்து தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளார் நினைவுக் கருத்தரங்கு ஒன்றை கடந்த ஜூன் மாதம் 12ம் திகதி நடாத்தின.

பல தசாப்தங்களாக தமிழரது வாழ்வுரிமைக்காகவும் - தமிழரது இன, மொழி, கலாசார பண்பாட்டு உரிமைகளுக்காகவும் பலதரப்பட்ட முயற்சிகள், போராட்டங்கள் என பலவும் நடைபெற்றுக்கொண்டிருக்கும் இந்நாட்டில், தமிழ் மொழிக்காகவும் தமிழருக்காகவும் அனைத்துலக அளவில் தன்னிகரில்லாப் பணியாற்றிய மாபெரும் அறிஞரும் இலங்கைப் புதல்வருமான தனிநாயகம் அடிகளார் பற்றி பலரும் அறியாதிருப்பது அல்லது சரிவரத் தெரிந்துகொள்ளாதிருப்பது மிகவும் வெட்கத்திற்குரியதாகும்.

அவரது அறிவுத் திறனும் பன்மொழிப் புலமையும் அவரது பணிகளை அனைத்துலக அளவில் மிகவும் உயர்மட்டத்தில் வைத்திருந்ததினாலோ என்னவோ சாதாரண மக்கள் மட்டுமல்ல, படித்தவர்கள் கூட தனிநாயகம் அடிகளாரைப் பொறுத்தளவில் பாமரராகிப் போனார்கள்.

இக்குறைபாடுகளைக் கருத்தில்கொண்டு இந்நூற்றாண்டு விழாவைச் சிறப்பிக்கும் வகையில் இளைய தலைமுறையினருக்குத் தனிநாயகம் அடிகளாரை - அவரது பணிகளை எடுத்துச் செல்லவேண்டும் என்ற நோக்கில் கருத்தரங்கொன்று நடாத்தப்பட்டது. குறிப்பிட்ட பாடசாலைகள், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி மற்றும் பல்கலைக்கழக மாணவர்களென மட்டுப்படுத்திய அளவில் இக்கருத்தரங்கு ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது.

கடந்த ஜூன்மாதம் 12ம் திகதி காலை 9.30 மணிக்கு மட்டக்களப்பு சாள்ஸ் மண்டபத்தில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் ஏறத்தாள 150ற்கும் மேற்பட்ட மாணவர்களும் ஆர்வலர்களும் கலந்து கொண்டனர். ஒளியேற்றி




மலர்வேந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



இறைவணக்கத்தோடு ஆரம்பிக்கப்பட்ட கருத்தரங்கில் மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை ஜோசப் பொன்னையா ஆண்டகை அவர்கள் சிறப்பு அதிதியாகக் கலந்துகொண்டார். சமூகத்தொடர்புநிலைய இயக்குனர் அருள்தந்தை ஜெயகாந்தன் அவர்கள் வரவேற்புரை வழங்க, ஆசிச் செய்தி வழங்கினார் மறைமாவட்ட ஆயர் அவர்கள். தமிழ் இலக்கிய எடுகோள்க ளோடு சுவையான உரையாக விளங்கியது ஆயர் அவர்களது ஆசிச்செய்தி.

ஆசியுரை நிறைவைத் தொடர்ந்து, **"தனிநாயகம் அடிகளாரது வாழ்வும் பணி யும்"** எனும் தலைப்பில் முதலாவது கருத்து ரையை வழங்கினார் கிழக்குப் பல்கலைக் கழக விரிவுரையாளரான அருள்தந்தை *A.A.* நவரெட்ணம் (நவாஜி) அவர்கள்.

தனிநாயகம் அடிகளாரது வாழ்க்கை வரலாறு, அவரது பலதரப்பட்ட பணிகளை பல்வேறு காலகட்டங்களாக வகுத்து அத்து டன் பல தகவல்களையும் உள்ளடக்கிய



தாக, விரிவுரையாற்றிய அருட்தந்தை அவர்களின் உரை மிகவும் நன்றாக, பயன் மிக்கதாக அமைந்திருந்தது என பலரும் பாராட்டினர்.

அவரை அடுத்து, **"தனிநாயகம் அடிகளாரது ஆய்வு முயற்சிகளும் வெளியீ டுகளும்"** எனும் தலைப்பில் காத்திரமான உரை ஒன்று வழங்கப்பட்டது. வழங்கியவர் அருள்தந்தை தமிழ்நேசன் அவர்கள். மன்னார் மாவட்டத்தில் இருந்து வந்து சிறப்பித்த தமிழ்நேசன் அடிகளார், மன்னார் தமிழ்ச் சங்கத்தின் தலைவரும், 'மன்னா' பத்திரிகை யின் ஆசிரியரும், 'கலையருவி' கலைத் தொடர்பு நிலைய இயக்குனருமாவார். இன்று ஈழத்தில் கணிக்கப்படுகின்ற சிறந்த பேச்சாள



ராகத் திகழ்கின்ற அடிகளாரை நாட்டின் பல்வேறு பாகங்களிலும் அரங்குகளிலும் காணமுடிகிறது.

தமிழாராய்ச்சித் துறையில் தனிநாயகம் அடிகளாரது பலதரப்பட்ட பங்களிப்புகளையும் அவரது நூல் வெளியீடு கள், *'Tamil Culture'* எனும் சஞ்சிகை வெளியீடு, அவரது ஆராய்ச்சிகளுக்கும் வெளியீட்டு முயற்சிகளுக்கும் பின்புலமாயிருந்த நோக்கங் கள், அவரது தனித்துவங்கள் பற்றியெல்லாம் விரிவாக எடுத்துரைத்தார் தமிழ்நேசன் அடிகளார். பலரும் ஆர்வமுடன் எதிர்பார்த்த அடிகளாரது உரை எதிர்பார்ப்பிற்கேற்ப கருத்தும், சுவையும் மிக்கதாகவே அமைந்தி ருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



இறுதியாகக் கருத்துரை வழங்கியவர் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் மொழித்துறையில் முதுநிலை விரிவுரையாளராக விளங்கும் திருமதி. ரூபி வலன்ரினா பிரான்சிஸ் அவர்கள். நூல் விமர்சனம், ஆய்வுகள், வெளியீடுகள், விழாக்கள் என எப்போதும் பரபரப்பாகப் பணியாற்றுபவர். **“தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாரின் தமிழ்த்தூதுப் பயணங்களும் பயன்களும்”** எனும் பொருளில் கருத்துரை வழங்கினார்.

தனிநாயகம் அடிகளாரின் பணிகளில் முக்கியமாக இடம் பெறும் ஒன்று, அவரது தமிழ்த்தூதுப் பயணங்கள், அவரது பயணங்களின் நோக்கம், அவர் சென்ற நாடுகள், அங்கு அவரது பணிகள், அனுபவங்கள், பயணங்களின்போது அவர் கண்டு பிடித்த பழந்தமிழ் நூல்கள், அங்கு காணப்படும் தமிழரது பண்பாட்டு அம்சங்கள், அவை பற்றிய அடிகளாரது கருத்துகளையெல்லாம் எடுத்து விளக்கிய ரூபி அவர்கள் ஆய்வு பூர்வமான உரை ஒன்றை வழங்கினார்.



உரைகளைத் தொடர்ந்து ‘கேள்வி நேரமும்’ கருத்துப் பகிர்வுகளும் இடம்பெற்றன. மாணவர்களுக்கும் மற்றவர்களுக்கும் பல்வேறு வகையிலும் பயன்படத்தக்க வகையில் தனிநாயகம் அடிகளாரது வாழ்க்கைக் குறிப்புகள் அடங்கிய துண்டுப் பிரசுரங்கள் வழங்கப்பட்டன.

இறுதியாக, நன்றியுரையை புனித மிக்கேல் கல்லூரி பிரதியதிபர் திரு. பெஸ்லியோ வாஸ் அவர்கள் கால நேரத்திற்குப் பொருத்தமான வகையில் சுருக்கமாக நிகழ்த்தி நிறைவு செய்தார்.

நிகழ்ச்சிகளனைத்தையும் மிகவும் கருத்தாழமுடனும் உரைகளுக்குக் குறையாத சுவையுடனும் குறிப்புகளுடனும் திறம்படத் தொகுத்து வழங்கினார் திரு. ஆனந்தா *A.G.* இராஜேந்திரம் அவர்கள்.



நடைபெற்ற நிகழ்வுகளனைத்தும் தொய்வின்றியும், காலநீடிப்பு இன்றியும் கச்சிதமாக நடைபெற்றன என்பது, நிகழ்விற்கு வந்திருந்த பலரது கருத்தாகவும் இருந்தது. ▲




எதிர்வரும் ஜூலை 14ம் நாளை உலகத் தொடர்பு தினமாக இலங்கை கத்தோலிக்கத் திருச்சபை கொண்டாடுகிறது.

இவ்வாண்டு உலகத் தொடர்பு தினத்திற்காக பின்வரும் கருப்பொருள் திருத்தந்தை 16ம் பெனடிக்ட் அவர்களால் வழங்கப்பட்டிருந்தது.

**“சமூக வலைப்பின்னல் உண்மையினதும் நம்பிக்கையினதும் நுழைவாயில், மறைபோதகத்திற்கான புதிய பரப்புகள்”**

திருத்தந்தை வழங்கியுள்ள இச்செய்தியில், “மக்கள் தங்களுக்குள் கருத்துகளை, தகவல்களை, அபிப்பிராயங்களை பரிமாறிக்கொள்ள ஏதுவானதும் புதிய உறவுகளும் சமூக வடிவங்களும் உருப்பெற வல்லதுமான ஒரு திறந்த மக்கள் பரப்பை உருவாக்க உதவுகின்ற ஒன்றாக, எண்ம அல்லது டிஜிட்டல் சமூக வலைப்பின்னலில் அபிவிருத்தியை நான் கருதுகின்றேன்” என்று குறிப்பிட்டுள்ள திருத்தந்தை, இதற்கு அர்ப்பணிப்பும் மொழியாற்றலும் தேவைப்படுவதோடு இயேசுவினுடைய படிப்பினைகளை முன்னெடுத்துச் செல்லும் மனித் மாண்பின் விழுமியங்களையும் இயேசுவினுடைய செய்திகளையும் பிகிர்ந்துகொள்ள விளையும் விசுவாசிகளின் முழுமையான பங்களிப்பின்மூலம் நன்மையடைய முடியுமெனக் குறிப்பிட்டுள்ளார். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# நம்பிக்கையாய் இரு! ஜூலை

1. "என் நம்பிக்கையும், நான் எதிர்பார்க்கும் நன்மையும் உம்மில்தானிருக்கின்றன" என்று மீண்டும் மீண்டும் நம்முடைய ஆண்டவரிடம் சொல். **(வாரின், சே.ச., சகோ. பாரத்துக்கு....)**

2. நம்பிக்கை யாரையும் ஏமாற்றியதில்லை. கடவுளை நம்பின எவரும், அவமானப்பட்டுச் சென்றதில்லை. நான் நித்திய காலமும் மகிழ்வுற்றிருப்பேன் என்று உறுதியாயிருக்கிறேன்: ஏனெனில், நான் அவ்வாறே இருப்பேன் என்ற உறுதி எனக்குண்டு: அந்தை, ஆண்டவரே, உம்மிடமிருந்து நம்பிக்கையுடன் நோக்குகிறேன், ஆண்டவரே, உம்மீது நம்பிக்கை வைத்தேன், நான் ஒருபோதும் மனக்குழப்பத்துடன் இரேன். **(முத். கோலம்பியர், சே.ச)**

3. கடவுள் தாராளமுள்ளவர். மனிதர் கையில் நான் கண்டடையாததை அவர் கையில் காண்பேன். இவர்கள் எனக்கு யாதொன்றையும் கொடாவிடினும், கடவுள் எனக்கு எல்லாவற்றையும் கொடுப்பார். **(புனித இஞ்ஞாசியார்)**

4. திரு இருதயம் நமக்குக் கொடுத்திருக்கும் ஆவலின்படி உயர்ந்த புனிதத் தனத்தை நாம் அடைவதற்கு, அவர் நம்மிடம் கேட்பது மிகுதியான நம்பிக்கையும், நம்மை முழுவதும் நம்பாது, அவரது அன்பில் முழுச்சார்புமே! **(புனித மார்கரேட் மேரி)**

5. கடவுளின் தயை, அவரது இரக்கம், படைப்புகள் மீதுள்ள அன்பு இவற்றைப்பற்றி, மக்கள் குறுகிய எண்ணம் கொண்டிருக்கிறார்கள். கடவுளை படைப்புகளினால் அளக்கிறார்கள். கடவுளோ அளவிடற்கரியவர், அவரது தயை எல்லையற்றது. **(இயேசு சகோ.கன்சோலாத்தாவுக்கு....)**


6. நான் கடவுளின் பக்கம் நம்பிக்கையுடனும் அன்புடனும் என் இருதயத்தை மேலே எழுப்புவது, அவர் என்னைக் கனமான பாவத்திலிருந்து காப்பாற்றினதற்காக அன்று. ஒருவன் எத்தனை பாவங்களைக் கட்டிக்கொள்ளக்கூடுமோ அத்தனையையும் நான் கட்டிக்கொண்டிருந்தாலும், என் நம்பிக்கையில் சிறிதளவும் இழக்கமாட்டேன். துயரால் உடைந்த என் உள்ளத்துடன், என் மீட்பாளி கையில் விழுவேன். **(சிறுமலர்)**

7. மிக நம்பிக்கையற்ற வாய்ப்புகளிலும் நாம் தேவ பராமரிப்பைக் கண்டு, எல்லாம் மூழ்கிப்போயின என்று எண்ணும்போதுதான் கடவுள் நம்மை மிகக் கருத்தாய்க் கவனிக்கிறார் என்று உணரவேண்டும். **(புஷெர்டோன்)**

— எட்வெட்- தேவதாசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




# கிழக்கில் கிறீஸ்தவம்

ஆனந்தா ஏ.ஜி. இராஜேந்திரம்

மிக நீண்ட கால எதிர் பார்ப்புகளின் பின்னர் மட்டக்களப்பு வாழ் கத்தோலிக்க மக்களின் மனங்களைக் குளிரப் பண்ணியதொன்றுதான் மட்டக்களப்பு மறை மாவட்டம்! அதன் கனாகனத்தைப் புரிந்துகொள்ள 'பழையதை' இரைமீட்டல் பொருத்தமானது. ஏனெனில், அதன் கூர்ப்புப் பற்றித் தெரிந்துகொள்வது நல்லது மட்டுமல்ல எமது மக்களுக்கு ''பழையது' தான் மனதிற்குப் பிடித்த உணவும் கூட!

புனித தோமையார் கிறீஸ்துவின் உயிர்ப்பு, விண்ணேற்றம் ஆகியவற்றின் பின் சொற்ப காலத்திலேயே இயேசுவை இந்திய மண்ணிலும் அதை அண்மித்த பகுதிகளிலும் அறிவித்திருந்தார். ஆயினும் 16ஆம் நூற்றாண்டளவில் ஈழ மண்ணைப் பொறுத்த வரையி லும் பன்னெடுங்காலமாக சைவமும், இரண்டாயிரம் ஆண்டுகளாக பௌத்தமும், பத்தாம் நூற்றாண்டி லிருந்து இஸ்லாமியமுமே பெருமளவில் பின்பற்றப்பட்ட சமயங்களாக இருந்தன.

1549 இல் கண்டி மன்னனது மைத்துனன் மட்டக்களப்பு இளவரசனுக்கு அருட்தந்தை சிமோன் கொய்ம்ப்ரா *(O.F.M.)* மறைக்கல்வி வழங்கிக் கொண்டி ருந்தார் என்று சரித்திரத் தகவல்கள் கூறுகின்றன. இதே இளவரசனுக்கு மொரில் பிரட்டோ என்பவனின் தலைமையின் கீழ் பயணக்குழுவொன்று மட்டக்களப் பில் தரையிறங்கியதையடுத்து, போர் வீரர்களுடன் வந்திருந்த பிரான்சிஸ்கன் அருட்தந்தை திருமுழுக்கு வழங்கி, டொம் லூயிஸ் என்ற பெயரைச் சூட்டி வைத்தார். இதனைத் தொடர்ந்து வன்னிச்சி இளவரசி யும் தன் இரு புதல்வர்களுடனும், வீட்டாருடனும் கத்தோலிக்கத் திருமறையில் இணைந்து கொண்டனர். கத்தோலிக்க மதத்தை ஏற்றுக் கொண்ட மட்டக்களப் பின் முன்னோடிகளாக இவர்களையே கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வரலாற்றில், மட்டக்களப்பு கண்டி இராஜதானியின் கொல்லைப் புறமாக இருந்து வந்துள்ளது. அதன் வாசனைத் திரவியங்களின் வியாபாரத்திற்கும், மட்டக்களப்பின் நெல் வளமும், மீன் வளமும், உப்பு வளமும் காரணமாக, கண்டி மண்ணுக்கு மட்டக்களப்பு அவசியமாக இருந்தது. அதேசமயம், யாழ்ப்பாணத்திற்கும் (மன்னார், புத்தளம், வன்னி உட்பட) மட்டக்களப்பிற்கும் இடையிலான தூரமும் அதிகமாக இருந்த காரணத்தினால் கண்டிக்கும் மட்டக்களப்பிற்கும் இடையிலான இணைப்பு அதிகமாக அமைந்திருந்தது.

ஆரம்ப காலத்தில் போர்த்துக்கேயரோடு வந்த குருக்களின் கருணைமிக்க செயற்பாடுகளும், தியாக வாழ்வும், போர்த்துக்கேய வீரர்கள் மற்றும் அதிகாரிகளின் நல் நடத்தையும் அதிகமான மக்களை கிறீஸ்தவத்தில் ஈடுபாடு கொள்ளப்பண்ணியது. ஏராளமானவர்கள் மதம் மாறினர்.

ஆனாலும், மதம் மாறிய அத்தனைபேரும் ஆழமான சமயப் பற்றுறுதி கொண்டவர்களாக இருக்கவில்லை. பலர் தமக்குக் கிடைக்கக் கூடிய நன்மைத்தனங்களின் பொருட்டே மதம் மாறியிருந்தனர். அதேசமயம் போர்த்துக்கேயர்களின் குடும்பங்கள், போர்த்துக்கேய போர் வீரர்கள் உள்ளூரில் திருமணம் செய்ததால் உருவாகிய குடும்பங்கள் மற்றும் கிறீஸ்துவை உண்மையாகவே தம் இறைவனாக ஏற்றுக் கொண்ட உள்ளூர் வாசிகளே நிலையான விசுவாச வாழ்வைக் கடைப்பிடித்து வந்தனர்.

காலப்போக்கில் தம் வியாபார நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளவும் தமது 'ஆட்சி'யைப் பலப்படுத்திக் கொள்ளவும் போர்த்துக்கேயர் கரையோரப் பகுதிகளில் கோட்டைகள் அமைத்தனர். மட்டக்களப்பில் புளியந்தீவில் அக்கோட்டை கட்டப்பட்டது. மேலும், தொடர்ந்து வந்த காலங்களில் போர்த்துக்கேயரின் வைரிகளான டச்சுக்காரர்களும் இலங்கையின் நெல்வளம் மிக்கதும், வாசனைத் திரவியங்களை கரையோரப்பகுதிகளில் கொள்வனவு செய்ய வாய்ப்பானதுமான மட்டக்களப்பு பற்றி அறிந்திருந்த காரணத்தினால் அடிக்கடி கடற்பகுதியில் ரோந்துக் கப்பல்களை அனுப்பிக் கொண்டிருந்தனர். தமது கோட்டைகளை உருவாக்கவும், தக்கபடி பலப்படுத்தவும் போர்த்துக்கேயர் தலைப்பட்டதற்கு இதுவும் ஒரு காரணம் என்று கூற முடியும்.

1599இலே டச்சுக்காரர் மட்டக்களப்பில் கால் பதித்தனர். கண்டி மன்னன் போர்த்துக்கேயரை இலங்கை மண்ணினின்றும் அப்புறப்படுத்த முனைந்து, டச்சுக்காரர்களுடன் ஒப்பந்தம் செய்து நாட்டுக்குள் அனுமதித்தான். 'கடலாலே போன பிசாசை கைகாட்டி வரவழைத்த மாதிரி' என்று சொல்லலாம். 1638 இல் மட்டக்களப்புக் கோட்டை டச்சுக்காரர் வசமானது. 1639 இல் திருமலை! பின்னர் அடுத்த ஆண்டில் நீர்கொழும்பு என்று போர்த்துக்கேயரின் வீழ்ச்சி தொடர்ந்தது.

வந்த சொற்ப காலத்திலேயே கத்தோலிக்கர்களுக்கெதிரான கலாபனையை டச்சுக்காரர்கள் தொடங்கிவிட்டனர். "திருமணமோ, திருமுழுக்கோ, மறைக்கல்வியோ எதுவானாலும் நடக்கலாம் ஆனால், டச்சுக்காரர்களின் மத அனுஷ்டானங்களின்படியே இடம்பெறவேண்டும்" என்று கட்டளை விதிக்கப்பட்டது. கோயில்கள் இடிக்கப்பட்டன அல்லது தங்களது பாவனைக்கு எடுத்துக்கொண்டனர். கத்தோலிக்கத்தை மறுதலிப்பவர்களுக்குப் பதவிகள், வசதிகள்! எனவே, பலர் டச்சுக்காரர்களோடு இணைந்தனர். கத்தோலிக்கத்தை மறுத்தனர். குருக்கள் வேட்டையாடப்பட்டனர். திருச்சபை நிலக்கீழ் திருச்சபையாகிற்று. தமது விசுவாசத்தில் உறுதி பூண்டிருந்தவர்களால் கத்தோலிக்கத் திருச்சபை உயிர் வாழ்ந்து கொண்டிருந்தது. பல போர்த்துக்கேய மற்றும் ஏனைய குடும்பங்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நாட்டின் உள்பகுதி நோக்கி நகர்ந்தனர். கண்டி இராஜதானியும் அவர்களுக்கு ஆதரவு காட்டியது.

நாட்டின் பரிதாப நிலை இந்திய கோவா மாநிலத்தின் கதவுகளைத் தட்டியது. அதன் பலன், யோசப் வாஸ் முனிவர் கூலிபோன்று வேடம் கொண்டு, 22 மைல் கடல் நீளத்தை 20 நாட்கள் பயணம் செய்து, கண்களில் எண்ணெய் விட்டபடி காவல் பார்த்துக் கொண்டிருந்த டச்சுக்காரரை ஏமாற்றிக்கொண்டு மன்னார் வந்திறங்கினார். அவரது அயராத மறைபரப்புப் பணியால் மட்டக்களப்பும் பிழைத்தெழுந்தது; கத்தோலிக்க விசுவாசம் தலைநிமிரத் தொடங்கியது. பல சந்தர்ப்பங்களில் ஆட்சியாளர்கள், அதிகாரிகள் ஆகியோருக்கெதிராக மக்கள் பேசவும், செயற்படவும் தலைப்பட்டனர்.

1557 இல் இலங்கை முழுவதும் இந்தியாவின் கொச்சின் மேற்றிராசனத்தின் பகுதியாக்கப்பட்டது. 1566இல் கொச்சின் ஆயரும், மெல்கியோர் நூன்ஸ் அடிகளும் இலங்கை வந்து பல பகுதிகளையும் சுற்றிப் பார்வையிட்டனர். கரையோரப் பிரதேசங்களில் கத்தோலிக்கத்தின் வளர்ச்சி அவர்களை மகிழப்பண்ணியது.

படிப்படியாகக் காலம் மாறத் தொடங்கியது. பிரிட்டிஷார் இலங்கையைக் கைப்பற்றினர். கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டன. மதச் சுதந்திரம் மெதுமெதுவாக அனுமதிக்கப்பட்டது. இஸ்லாமியச் சட்டமும் ஏற்கப்பட்டது.



1814இல் மெதடிஸ்த திருச்சபையின் வில்லியம் ஹோல்ட் மட்டக்களப்பு ரேகடியில் (சுங்கப்பகுதி) வந்திறங்கினார். மட்டக்களப்பில் கல்வித் துறையில் மாற்றங்கள் ஏற்படலாயின. ஆங்கிலக் கல்வி அறிமுகமானது.

1834இல் 13ஆம் கிறகரி பாப்பரசர் இலங்கையைத் தனி மறைமாவட்டமாகப் பிரகடனம் செய்தார். 'ஓரேட்டரி சபை' அருட் தந்தை பிரான்சிஸ் சேவியரை இலங்கையின் முதல் ஆயராக நியமித்தார் பாப்பரசர். ஆனால், பதவி ஏற்க முன்னமே அவர் மரணமானார். தொடர்ந்து ஆயராக அமலமரித் தியாகிகள் சபை வின்சன்ட் டி றொசாய்ரோ நியமனம் பெற்றார். 1838 தை 14இல் பதவியேற்பு நிகழ்ந்தது. 18ஆம் நூற்றாண்டு நடுப்பகுதியில் இலங்கையில் 150,000 கத்தோலிக்கர்கள் 350 கோயில்கள் 35 மறைபணியாளர்கள் இருந்ததாகத் தெரிய வருகின்றது.

அடுத்து, ஆயராகப் பொறுப்பேற்ற பெட்டாசினி அவர்கள், மார்செல்லஸ் பேராயருடன் ஏற்பாடு செய்து சார்ள்ஸ் யூஜின் தெ மஸநெட் எனும் குருவால் புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருந்த அமலமரித் தியாகிகள் சபையின் குருக்களை இலங்கைக்கு வரப்பண்ணினார். ஆயர் பெட்டாசினியை அடுத்து அருட்திரு ஸ்ரீபன் செமேரியா ஆயராக அமைந்தார். இவர் காலத்தில் 1850 முதல் 1853 வரை மட்டக்களப்பிலும் அமலமரித் தியாகிகள் சபைக் குருக்களால் விசுவாசம் தழைத்தோங்கியது.

தொடர்ந்து கோயம்புத்தூரைச் சேர்ந்த அருட்தந்தை கிறிஸ்தோபர் பொஞ்சீன் ஆயராக திருநிலைப்படுத்தப்பட்டார். 1858 மே மாதம் 20 ஆம் நாள் திருமலையில் சடங்குகள் நிறைவேறின. 1886இல் கொழும்பு புதிய மறைமாவட்டமாக பிரகடனமானபோது, ஆயர் பொஞ்சீன் அங்கு மாற்றம் பெற்றதையடுத்து யாழ்ப்பாணம் மட்டக்களப்பு பகுதிகளையுள்ளடக்கியதான பகுதிக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



புதிய ஆயராக அருட்தந்தை மெலிசான் பதவியேற்ற பின், திருமலை மட்டக்களப்பு ஆகிய பகுதிகளுக்கு கப்பல் மூலம் பயணித்து விசுவாசிகளைப் பார்வை யிட்டார். அப்போது அவர் 300 கத்தோலிக்கரை மாத்திரம் கொண்டிருந்த முற்றுமுழுதான கத்தோலிக்கக் குடியேற்றமான சொறிக்கல்முனைக்கும் செல்லத் தவறவில்லை.

1893 ஆவணி மாதம் 25 ந்திகதி 13ஆம் லீயோ பாப்பரசர் திருமலை, காலி மறைமாவட்டங்களைத் தாபித்தார். புதிய திருமலை மறைமாவட்டத்தை பிரான்சு தேசத்து ஷம்பெய்ன் மாநிலத்தின் இயேசு சபைத் துறவிகள் பொறுப்பேற்று வடிவம் கொடுத்தனர்.

அவர்களது சேவையின் பயனாக மட்டக்களப்பில் 40 ஆண்டுகளாகச் செயல்பட்ட அமலமரித் தியாகிகளின் சேவை முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. இவர்களை மக்கள் 'குருசொழிச்சான் சாமிமார்' என்றே சொல்லிப் பழக்கப்பட்டிருந்த கால கட்டமும் இருந்தது. தொடர்ந்து இயேச சபைத் துறவிகளின் மூலமாக புதிய மறைமாவட்டத்தில் கல்விப்பணி ஓங்கலாயிற்று. மட்டக்களப்புப் பகுதி, திருமலை மறைமாவட்டத்தின் இதயம் போன்று அமைந்தது. கத்தோலிக்கரின் தொகை, விசவாசிகளின் செயற்பாடு, ஆலயங்களின் எண்ணிக்கை முதலிய அனைத்து வகையிலும் மட்டக்களப்பு பிராந்தியம் சிறப்புறத் தொடங்கியது. ஒரு கட்டத்தில் "நமக்கென்ற ஒரு..." ஏக்க உணர்வு மட்டக்களப்பில் உதயமாயிற்று. இதனால் மறைமாவட்டம் மட்டக்களப்பு மறைமாவட்டம் என்ற பெயருடனோ அல்லது மட்டக்களப்பு திருமலை என்ற பெயருடனோ அமைந்தாலென்ன என்ற சிந்தனைப் போக்குத் தலைதூக்கலாயிற்று.



1965 இல் ஆயர் இக்னேஷியஸ் கிளெனி காலத்தில் 'திருமலை – மட்டக்களப்பு மறைமவாட்டமாகப் பெயர் மாற்றம் பெற, புளியந்தீவு மரியாள் ஆலயம் இணைப் பேராலயமாக உயர்வு பெற்றதுடன் சலசலப்பெல்லாம் ஓய்ந்தன. ஓய்ந்தனவே தவிர கைவிடப்படவில்லை.

நாட்டின் சமகால நிலை கருதி, அவ்வப்போது பல மட்டங்களிலும் எழுப்பப்பட்ட 'நமக்கென்றொரு மறைமாவட்டம்' என்ற ஏக்கப் பெருமூச்சை நாடி பிடித்துத் தெரிந்த ஆயர் ஜோசப் கிங்ஸிலி சுவாம்பிள்ளை மேலிடத்திற்குச் செய்த சிபாரிசின் வழி மட்டக்களப்பு மறைமாவட்டம் 16ஆம் ஆசீர்வாதப்பரி னால் உருவாக்கித் தரப்பட்டது. அத்தோடு கூட, இந்த மண்ணின் மைந்தன் ஒருவரையும் அதன் முதல் ஆயராகவும் தந்திருக்கின்றார் பாப்பரசர். ஒரு காலத்தில் துயரங்கள் பலவற்றைச் சந்தித்தது இந்த மறை மாவட்டம். வேதத்திற்காக உயிர்சாட்சி தந்தவர்களால் பலம் பெற்ற மறைமாவட்டம் இது என்பதை நாம் தெரிந்திருத்தல் வேண்டும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## கவிதைகள் – 03



### பெண்மை

பெண்ணே உன்னைப்
போகப்பொருளாய்க் காண்பிக்கவே
சிற்பிகள் பலவோர்
சிலை வடிக்கின்றார்:
கேட்டால் –
தெய்வாம்சமென்றும்
தெவிட்டா விருந்தென்றும்
கதையளப்பர்

உண்மை எதுவென்று நீ
எப்போதாவது உணர்கின்றாயா.....?



### பேதமை

நம்மில் பலரும்
கபோதிகளாய் – குரூபிகளாய் –
ஏதுமறியா
எடுப்பார் கைப்பிள்ளைகளாய்
வாழ்ந்தே மாய்கின்றோம்!

இறைவன் படைப்பின்
பெருமையை உணராப்
பேதைகளாய்....!

கண.மகேஸ்வரன்

### பிணி வந்துற்றால்....

பிணியென்று வந்து
படுக்கையில் விழுந்தால்தான்
திசைகள் பல தெரிகின்றன:
சிந்தனை வட்டமும் விரிகிறது.....
காணத் தவறியவையெல்லாம்
கண்முன் நிழலாடுகின்றன!
காலமும் கோலமும்
காட்சிப் பொருட்களாய்
விஸ்தாரம் கொள்கின்றன:
நாத்திகன் கூட ஆத்திகனாகப்
பரிணாமம் கொள்கின்றான்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




## இந்தியாவில் கீழைத்தேய கிறிஸ்தவம்

இந்தியாவில் பரப்பப்பட்டு வந்த கிறிஸ்தவமானது ஏனைய நாடுகளைப் போன்றே, சடங்கு சம்பிரதாயங்களைப் பின்பற்றும் முறை கொண்ட திருச்சபையாகக் காணப்பட்டது. ஏனெனில், கிறிஸ்தவமானது, வெவ்வேறு நாடுகளில் இருந்து, வெவ்வேறு காலகட்டங்களில், வெவ்வேறு மறைபரப்பாளர்களினால் இந்தியாவுக்குக் கொண்டுவரப்பட்டது. வெவ்வேறு சமூகங்களில், திருச்சபைகளில் வாழப்பட்டு வந்திருக்கிறது. திருச்சபையின் முதல் பொதுச்சங்கம் ஜெருசலேம் பொதுச்சங்கம். எந்தவொரு இன மக்களும் தங்கள் பண்பாடு, கலாசார, சம்பிரதாயங்களைக் கைவிடாமல் கிறிஸ்தவம் வாழமுடியும் எனக் கூறியிருக்கிறது. எனவேதான், இத்திருச்சபைகள், தம்முடைய கொடைகள், வரங்கள், ஆன்மீக மரபுகள், வழிபாட்டு முறைகளை, சடங்கு சம்பிரதாயங்களை பல நூற்றாண்டு காலமாய் மாற்றம் இல்லாது வாழ்ந்து வந்துள்ளன. ஆனால், இன்று இந்தியாவில் ஒரே கிறிஸ்தவம் பல்வேறு மரபுகளைப் பின்பற்றும் திருச்சபைகளில் வளர்ந்து வந்துள்ளது.

இந்தியாவிலே, கத்தோலிக்க திருச்சபையின் தலைமையானது, 1886ல் போர்த்துக்கல் அரசுக்கும், திருச்சபையின் மறை பரப்புதல் சபைக்குமிடையே மேற்கொள்ளப்பட்ட "பத்றோவாடோ" எனும் உடன்படிக்கையின் விளைவாக உருவானது. இதன்படி 2000ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட இந்திய வழிகாட்டியின்படி, 15.5 மில்லியன் மக்கள் கத்தோலிக்க திருச்சபையிலுள்ளதாய்த் தரவுகள் கூறுகின்றன. இதுவே, இந்தியாவிலுள்ள திருச்சபைகளுள் மிகப்பெரியதாகும். பெருந்திரளான உள்நாட்டுக் குருக்கள் பணியாற்றுவதே இதற்குக் காரணமாகும். 1944ல் சென்னையில் இந்திய கத்தோலிக்க ஆயர் மன்றம் உருவாக்கப்பட்டது. இன்று இந்தியத் திருச்சபையில் மூன்று தனிப்பட்ட திருச்சபைகள் அங்கம் வகிக்கின்றன.

I. சீரோ மலபார் திருச்சபை
II. சீரோ மலங்காரா திருச்சபை
III. இலத்தீன் திருச்சபை என்பனவாகும்.

இவைகள், கத்தோலிக்க திருச்சபையின் ஒற்றுமையை, உறவைப் பாதிக்காத வகையில் பின்னிப் பிணைந்து செயற்படுவதைக் காண முடிகிறது.

**I. சீரோ மலபார் திருச்சபை:**

இயேசுவின் விண்ணேற்பினைத் தொடர்ந்து 52ல் இந்தியாவிற்கு வந்து, மறை போதகம் செய்த புனித தோமையார் இந்தியாவில் மனந்திரும்பியவர்களைக் கொண்டு ஏழு கிறிஸ்தவ சமூகங்களை உருவாக்கினார். இவர்கள் சிரிய கிறிஸ்தவர்கள் அல்லது தோமையார் கிறிஸ்தவர்கள் என அழைக்கப்பட்டனர். இவர்கள் கிழக்கு சிரிய கிறிஸ்தவர்களுடன் வழிபாட்டு முறைகள், ஆன்மீகம், இறையியல், ஆன்மீகச் சட்டங்கள் போன்றவற்றில் நெருங்கிய உறவினைக் கொண்டிருந்தனர். இவர்களுடைய ஆயர்களும் கிழக்கு சிரிய பிதாப் பிதாவினாலேயே நியமிக்கப்பட்டிருந்தனர். 16ம் நூற்றாண்டிலே இந்தியா வந்த போர்த்துக்கேய கிறிஸ்தவ மறைபரப்பாளர்களை அவர்கள் மகிழ்வுடன் வரவேற்று பரிசுகளையும் பரிமாறிக் கொண்டனர். காலப்போக்கிலே இவர்களின் கருத்துகளிலும், வழிபாட்டு முறைகளிலும் வித்தியாசம் இருப்பதைக் கண்ட போர்த்துக் கேயர், இவர்களை நெஸ்தோரிய பிரிவினைக் கிறிஸ்தவர்களென சந்தேகித்தனர்.

**- தொடர் 16ம் பக்.....**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




இம்முறை 'தொண்டனின் சில நிமிடங்களுக்காக' நாம் சந்திப்பது திருவாளர் கணபதிப்பிள்ளை ஞானரெத்தினம் அவர்களை. குருக்கள்மடம் என்னும் கிராமத்தைச் சேர்ந்த இவர், தற்போது மட்டக்களப்பு கல்லடியில் வசித்து வருகின்றார். 1960ம் ஆண்டு ஜூலை மாதம் இருபத்தொன்பதாம் நாள் பிறந்த க. ஞானரெத்தினம் அவர்கள் ஒரு பன்முகக் கலைஞர் கல்வியியல் எழுத்தாளர், ஆசிரியர், பல்கலைக்கழக விரிவுரையாளர், சமூக சேவையாளர், வளவாளர் என்று பல்வேறு பரிணாமங்களில் பணிபுரிபவர். எனவே, இவரை 'தொண்டனுக்காக' பேட்டி கண்டோம்.

➡ *உங்கள் இளமைப்பருவம், குடும்ப விபரங்களைப் பற்றி எம்மோடு பகிர்ந்து கொள்ள இயலுமா...?*

எனது தகப்பனார் திருவாளர் பொ.கணபதிப்பிள்ளை அவர்கள் ஒரு சைவப் புலவர். மட்டக்களப்பு குருக்கள் மடம் கலைவாணி வித்தியாலயத்தில் அதிபராகக் கடமை புரிந்தவர். இலங்கை கல்வி நிர்வாகசேவை யணியைச் சேர்ந்தவர். இவர் ஆசிரியராக பணிபுரிந்த க.பொ.த. (உ.த) வகுப்பிற்குக் கற்பித்தார். எனவே, தாமும் பட்டம் பெற்றாக வேண்டும் என்ற எண்ணத்தில் பட்டதாரி ஆனார். அத்துடன் நின்று விடாமல் வெளிவாரிப் பட்டதாரிகளை உண்டாக்க வேண்டும் என்ற எண்ணத்தில் அதற்கான ஏற்பாடுகளைச் செய்து வெற்றிகண்டார்.

அதிகாலை 5.00 மணிக்கு எழுந்து சென்று தோட்டத்திற்கு தண்ணீர் பாய்ச்சுவார். சிறுபிள்ளையான நானும் அவருடன் செல்வேன். தோட்டத்திற்கு நடந்து செல்லும்போதும், வேலைகள் செய்யும் போதும் வாழ்க்கையில் என்ன செய்ய வேண்டும்? நேர்மையான வழிகள் எவை?, எவ்வாறு முன்னேற வேண்டும்? என்றெல்லாம் சொல்லித் தருவார். தென்னை மட்டைகள் இழைக்கப் பழக்குவார். (தகப்பனாரைப் பற்றிச் சொல்லும் போது அவரின் கண்கள் பிரகாசிப்பதைக் கண்டோம்).

நான் எனது ஆரம்பக் கல்வியை குருக்கள் மடம் மெதடிஸ்த மிசன் தமிழ்க்கலவன் பாடசாலையிலும், இடைநிலைக் கல்வியை மட்டக்களப்பு சிவானந்தா வித்தியாலயத்திலும் க.பொ.த. (உ.த) கணிதப் பிரிவின் கல்வியை மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியிலும் பெற்றுக்கொண்டேன். நான் உயர்தரப் பரீட்சை 1980ம் ஆண்டு எழுதினேன். பொறியியல் பீடத்திற்கான வெட்டுப்புள்ளி 223; எனக்குக் கிடைத்த புள்ளி 222. எனவே, கிழக்குப் பல்கலைக் கழகத்தில் விஞ்ஞானப்பட்டதாரியானேன்.

➡ *உங்கள் ஆசிரியப் பணிபற்றிச் சொல்வீர்களா...?*

ஆமாம்! 1985ம் ஆண்டு கல்முனை கார்மேல் பாத்திமாக் கல்லூரியில் இணைந்து கொண்டேன். சுமார் 17 வருடங்கள் அதிபர் அருட்சகோதரர் மத்தியூ அவர்களின் கீழ் பணிபுரிந்தேன். அதன்பின் சிவானந்தா தேசியபாடசாலையில் கடமையாற்றினேன். இதற்கிடையில், கொழும்புப் பல்கலைக் கழகத்தில் உள்வாரியாக பட்டப்பின்படிப்பு கல்வி டிப்ளோமாவில் சிறப்புச் சித்தி பெற்றேன். அதனால், இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் முதன்மை யாசிரியராகவும், பகுதிநேர விரிவுரையாளராகவும் பணிபுரிந்தேன். அத்துடன் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் கல்வி முதுமாணிப்பட்டத்தையும் பெற்றுக்கொண்டேன். பின்னர் 2010ம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் திறந்த பல்கலைக்கழக மட்டக்களப்பு பிராந்திய நிலையத்தில் நிரந்தர விரிவுரையாளராகக் கடமை புரிகின்றேன்.

➡ *உங்கள் எழுத்துப் பணிகள் பற்றிக் கூற இயலுமா...?*

'அகவிழி' என்னும் சஞ்சிகையில் சுமார் 15 கட்டுரைகள் எழுதியுள்ளேன். தற்போது அவற்றை இற்றைப்படுத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**மாணவர் பக்கம் ....**

போர்த்துக்கேயர் இவர்களை அணுகி, தமது "பத்றோவாடோ" அதிகாரத்தினைப் பயன்படுத்தி அனைவரும் திருத்தந்தையின் ஆளுகையின் கீழ் வரவேண்டும் என வற்புறுத்தினர். இதன் விளைவாக, சீரிய கிறிஸ்தவர்கள் மத்தியில் பிளவுகள் தோன்றின.

1559ல் உதயம்பூரில் நடைபெற்ற பேரவையில் இதுபற்றிக் கலந்துரையாடப் பட்டது. இதில் ஒரு பகுதியினர் இவர்களின் கோரிக்கைக்கு இணங்கினர். மறு பகுதியினர் திருத்தந்தையின் கோரிக்கையினை ஏற்றுக் கொண்டாலும், இலத்தீன் வழிபாட்டு முறையினை ஏற்க மறுத்தனர். திருத்தந்தையின் வழிகாட்டலை வாழ முற்பட்டவர்கள் 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலே "சீரோ மலபார் திருச்சபை" எனும் உத்தியோகபூர்வமான பெயரையும் பெற்றனர். 1896ல் விசுவாசப் பரப்புதல் மூலம் இரண்டு அப்போஸ்தலிக்க பீடங்களையும் 1898ல் மூன்று அப்போஸ்தலிக்க பீடங்களையும் உருவாக்கி, இன்று நான்கு உயர்மட்ட மாவட்டங்களையும், 24 மறை மாவட்டங்களையும் 7252 குருக்களையும், 34,769 பெண் துறவிகளையும், 4729 ஆண் துறவிகளையும், இரண்டு மில்லியன் அங்கத்துவர்களையும் கொண்ட சிறந்த திருச்சபையாய் விளங்குகிறது. இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் இவர்கள் இன்று பணியாற்றுவதைக் காணமுடிகிறது.

---

(Update) புத்தக உருவில் கொண்டுவரும் முயற்சியில் ஈடுபட்டுள்ளேன். அவ்வப்போது தேசிய பத்திரிகைகளிலும் கட்டுரைகளை எழுதியுள்ளேன். உயர்தர கணித பாடம் தொடர்பான மாதிரி வினாத்தாள் தொகுதிகளையும் வெளியிட்டுள்ளேன்.

➜ *உங்கள் சமூகப் பணிகள் தொடர்பாக என்ன குறிப்பிட விரும்புகிறீர்கள்...?*

❋ குருக்கள் மடம் சிறிகிருஷ்ணன் கோயிலுடன் இணைந்ததாகச் 'சமூக மேம்பாட்டு மையம்' என்ற அமைப்பொன்று உள்ளது. அதன் தலைவராக நான் உள்ளேன். என்னுடைய சிந்தனையில் உருவான அமைப்பே அது. ஆலயங்கள் சமயப் பணியையும் கடந்து சமூகப் பணிகளையும் மேற்கொள்ள வேண்டும் என்ற சிந்தனையின் விளைவேயது. ஏழையொருவர் இறந்தால் மரணச் செலவாக ரூபா. 5000/= வழங்குகின்றோம். இலவச மூக்குக் கண்ணாடி, பாடசாலை மாணவர்களுக்கு இலவச பாதணி வழங்குதல், ஏழைப் பெண்களுக்கு திருமண உதவியாக ரூ. 25,000/= வழங்குதல் போன்ற செயற்பாடுகளில் கிராம மட்டத்தில் ஈடுபட்டேன். பின்னர் சிந்தனை விரிவடைந்தது. அதன் பிரகாரம் 2013 பெப்ரவரி 25ம் நாள் மாவட்ட மட்டத்தில் விருதளிப்பு விழா ஒன்றை ஏற்பாடு செய்தோம். க.பொ.த. (சா.த), (உ.த), 5ம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்றோர், பல்கலைக்கழகத்திற்கு குருக்கள் மடத்தில் இருந்து தெரிவுசெய்யப்பட்டவர்கள், இலங்கை நிர்வாக சேவைக்கு தெரிவு செய்யப்பட்டவர்கள் மற்றும் கலாநிதிப் பட்டம் பெற்றவர்கள் பாராட்டப்பட்டார்கள். மட்டக்களப்பு மாவட்டச் செயலாளர் திருமதி. டி.எஸ்.எம். சாள்ஸ் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்கள்.

<u>எமது இணையத்தள முகவரி:</u>
www.kuruvursrikrishna.com.

➜ *இவற்றைத் தவிர சில புலமைப் பரிசில் திட்டங்களையும் ஏற்படுத்தியுள்ளீர்கள் என அறிகின்றோமே...?*

❋ எனது தந்தையாரின் பெயரில், உயர்திரு. பொன்னம்பலம் கணபதிப்பிள்ளை ஞாபகார்த்த புலமைப்பரிசில், அருட்சகோதரர் மத்தேயு அவர்களின் பெயரில் ஒரு புலமைப்பரிசில் என்பனவற்றை எனது சொந்த முயற்சியில் ஆரம்பித்து நடைமுறைப் படுத்தி வருகின்றேன். இதைத் தவிர நானும், அருட்சகோதரர் மத்தியூ அவர்களும் இணைந்து சுவாமி ஜீவானந்தஜீ ஞாபகார்த்த புலமைப்பரிசில் ஒன்றை ஏற்பாடு செய்தோம். கிழக்குப் பல்கலைக் கழக பட்டமளிப்பு விழாவில் வருடாந்தம் இது வழங்கப்படுகின்றது.


➜ *உங்கள் வாழ்வின் 'திருப்புமுனை' என நீங்கள் கருதுவது எதனை....?*

❋ கட்டாயம் இரண்டு விடயங்கள் பற்றிக் குறிப்பிட வேண்டும்.

ஒன்று: பதினெட்டு வருடங்கள் கல்முனை கார்மேல் பாத்திமாக் கல்லூரியில் முன்னாள் அதிபர் அருட்சகோதரர் மத்தியூ அவர்களின் கீழ் பணியாற்றிய அனுபவம். என்னிடம் நல்ல வித்தைகள் ஏதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




இருப்பின் அவை எல்லாம் அவரிடம் கற்றுக்கொண்டவை தான். எதனையும் உடனடியாகச் செய் வார்; இயலாது என்று சொல்லமாட் டார். நேரம் தவறாமை முக்கியம் என்று நடைமுறைப் படுத்துவார். ஏதாவது நிகழ்ச்சிகட்கு பிரதம விருந்தினர் நேரத்திற்கு வரா விட்டாலும் நிகழ்ச்சி ஆரம்பிக்கப்பட்டு விடுவதுடன், பிரதம விருந்தினருக்குரிய ஆசனமும் அகற்றப்பட்டுவிடும். அதிகாலை 5.00 மணிக்குக் கூட பாடசாலை முகாமைத்துவக் கூட்டம் இடம்பெற்றதுமுண்டு. அவர் வெளிநாடு செல்லும் சந்தர்ப்பங்களில் தனது கையொப்பமிடப்பட்ட வெற்றுக் காசோலைகளை என்னிடம் ஒப்படைத்துவிட்டுச் செல்வார். "உனக்கு ஏதாவது இன்ரவியூ நடந்தால், நான் இப்படி பிளாங் செக் உன்னிடம் தந்துவிட்டு செல்வதைச் சொல். உனக்கு நல்ல பொயின்ஸ் கிடைக்கும்" என்பார்.

இரண்டு: கொழும்பு பல்கலைக்கழகத்தில் பட்டப்பின்படிப்பு கல்வி டிப்ளோமா படிக்கக் கிடைத்தது. பேராசிரியர்கள் சோ. சந்திரசேகரம், மா. கருணாநிதி. பா. ஜவ்பர் போன்றவர்கள் உட்பட பலரிடம் படிக்கும் வாய்ப்பு கிடைத்தமை எனது பாக்கியம் என்றே கருதுகின் றேன். அவர்களின் தொடர்பு கிடைத்திருக்காவிட்டால் நான் இவ்வாறான உயர்நிலையில் இருந்திருக்கமாட்டேன்.

➡ *நீங்கள் 'தொண்டன்' வாசகர்களுக்குச் சொல்ல விரும்புவது என்ன?*

❋ மூன்று விடயங்கள் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன்.

1. வாசிப்புப் பழக்கம் : இப்போது வாசிப்புப் பழக்கம் அனைவரி டமும் அருகிவிட்டது. இதனால் அறிவு வளர்ச்சியின் பிரவாகம் தடைப்படுகின்றது. எனவே, அனைவரும் வாசிக்க வேண் டும். அப்பொழுதுதான் பிரச்சினைகளைத் தீர்க்கும் வல்லமை ஏற்படும். வாசிப்பதற்கான தடைகளை உடைத் தெறிய வேண்டும்.

2. எழுதுவது : அனைவரும் ஆற்றல் கள், சிந்தனை வெளிப்பாடுகள் உள்ளவர்கள்தான். எனவே, எழுது வது பற்றிச் சிந்திக்க வேண்டும். எழுத எழுதத் தேடல்கள் அதிகமா கும்: ஆற்றல்கள் வளரும்.

3. ஆலயங்களின் செயற்பாடுகள் : கோவில்கள், நிறைய வளங்களைக் கொண்டுள்ளன. குறிப்பாக, பிரபல் யமான கோவில்கள் ஏராளமான சொத்துகளைக் கொண்டுள்ளன. ஆலய உற்சவங்களில் பட்டாசுக் கென்றே போட்டி போட்டுக்கொண்டு காசைக் கரியாக்குகின்றார்கள். இப்பணத்தை நல்ல சமூகக் காரி யங்களுக்காகச் செலவிடலாம். குருக்கள்மடம், ஸ்ரீ கிருஷ்ணன் கோயில் இதற்கு முன்னுதாரண மாக இருக்கும் என நம்புகிறேன்.

இலங்கை திறந்த பல்கலைக்கழ கத்தின் மட்டக்களப்புப் பிராந்திய நிலை யத்தின் இரண்டாம் இடைநிலைக்கல்வி, முன்பள்ளிக்கல்வி, விசேட தேவையுடை யோர்க்கான கல்வி போன்ற துறைகளுக்கு பொறுப்பாளராக இருக்கும் திரு. க. ஞானரெத்தினம் அவர்கள், POPE மற்றும் FORUT போன்ற அமைப்புகளின் வள வாளராகவும் செயல்புரிந்தவர். இவருக்கு இவ்வாண்டு ஆரம்பத்தில், அகில இலங்கை இன ஒன்றிய மன்றம் 'சாமசிறீ தேசமானிய' என்று விருதளித்துக் கௌர வித்தமையும் குறிப்பிடத்தக்கது. இதற் காக இவருக்குப் பாராட்டுகளையும், வாழ்த் துகளையும் தெரிவித்துக்கொண்டு நன்றி கூறி விடை பெற்றுக்கொண்டோம்.






**வாழ்க்கையில் முன்னேற தடைக்கல்லாய் இருப்பது எது?**

தோல்வி ஏற்பட்டு விடுமோ என்ற பயம்தான் முன்னேற்றத்தின் தடைக்கல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# புனிதர்களின் வரலாறு



## ஆடி 06 : புனித மரியா கொரற்றி

பரிசுத்த பாப்பரசர் 12ம் பத்திநாதர் இப்புனிதையை 20ம் நூற்றாண்டின் 'புனித அக்னஸ்' என்றழைத்தார். 1890ம் வருடம் இத்தாலியின் அன்கோனா எனும் ஊருக்கருகிலிருந்த ஒரு சிறிய பண்ணையில் மரிய கொரற்றி பிறந்தார். குடும்பத்தில் ஏழு பிள்ளைகளில் மூன்றாவதாகப் பிறந்தார். தாயார் இவரைப் பற்றிக் கூறுகையில், "மகிழ்ச்சி, திறந்த மனம், நல்ல குணங்கள், சலனமற்றதன்மை, கீழ்ப்படிதல் போன்றவற்றுடன், வாழ்ந்த காலத்தில் பற்றுறுதியுடன் வாழ்ந்தாள்" என்கிறார். தீய எண்ணத்தோடு அவரை அடிக்கடி நெருங்கி வந்த அலெக்சாண்டர் என்ற இளைஞனின் ஆசைக்கு இணங்கமறுத்ததால் அவனால் கத்தியால் குத்தப்பட்டார். மரிக்கும் வேளையில் மரியகொரற்றி அலெக்சான்டருக்காகச் செபித்தது இறைவனால் ஏற்கப்பட்டது. 1902ம் வருடம் ஆடி மாதம் 6ந் திகதி உயிர்நீத்தார். 1950ம் வருடம் ஆடி மாதம் 25ம் திகதி புனிதர் பட்டம் பெற்றார்.

## ஆடி 11 : புனித பெனடிக்ற்



480ம் வருடத்தில் மத்திய இத்தாலியிலே நர்சியா எனும் ஊரில் பெனடிக்ற் பிறந்தார். இளமையிலேயே கெட்டுப்போன உலகத்தைக் கண்ணுற்று, தன் இல்லத்தை விட்டுப் புறப்பட்டுச் சென்று, துறவியாகி, உரோமுக்கு அருகிலிருந்த சுபியாகோ மலையிலுள்ள ஒரு குகையில் செபத்திலும், தவத்திலும் ஈடுபட்டார். அங்கு அண்மையில் தனிமையாக வாழ்ந்த துறவியான புனித ரோமானுஸ் என்பவரிடம் இருந்து கிறிஸ்தவ மறை அறிவைப் பெற்றுக்கொண்டார். காலப்போக்கில் இவரைச் சுற்றி பல துறவிகள் சீடராகினர். கட்டுக் கோப்பான விதிகளை அமைத்து அனைவரும் ஒரே சமூகமாக வாழ வழிசெய்தார். 529ம் வருடம் சுபியாகோவை விட்டு மொன்டி காசினோவுக்குச் சென்றார். அங்கே எதிர்காலத்தில் ஐரோப்பிய சமய வாழ்வின் மையமாக மாறிய பெரும் மடம் ஒன்றை உருவாக்கினார். புனித பெனடிக்ற் எழுதிய சட்ட விதிகள் இவருக்குப் பின்தோன்றும் துறவற சபைகளுக்கும் அடிப்படையாக அமைந்தன. தன்னை வெற்றிகொள்ளல், தன்னை வருத்துதல், தாழ்ச்சி, கீழ்ப்படிதல், செபித்தல், அமைதி காத்தல், இளைப்பாறுதல், உலகிலிருந்தும் அதன் கவனிப்புகளிலிருந்தும் விலகியிருத்தல் என்பவற்றை உள்ளடக்கியிருந்தன இவரது சட்ட விதிகள். புனித பெனடிக்டின் சகோதரியான புனித கொலஸ்டிக்கா அருட்சகோதரியாகி முதலாவது பெனடிக்ற்சபைச் சகோதரியானார். மொன்டி காசினோவுக்கருகில் அமைந்த இல்லத்தை இவரே தலைமைதாங்கி நடத்தினார். புனித பெனடிக்ற் 543ம் வருடம் பங்குனித் திங்கள் 21ந் திகதியன்று மொன்டி காசினோ ஆலயத் திருப்பீடத்தின் முன் திவ்விய நற்கருணை உட்கொண்ட பின் இறந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# குருத்துவ வாழ்வில் வெள்ளிவிழாக் காணும்

# அருட்தந்தை இக்னேஸ் ஜோசப் அடிகளார்

தற்போது மட்டக்களப்பு சகாயபுரம் பங்கில் பங்குத்தந்தையாகப் பணிபுரியும் அருள்தந்தை இக்னேஸ் ஜோசப் அவர்கள், இம்மாதம் 28ம் நாள், (28.07.2013) தமது குருத்துவ வாழ்வில் 25 ஆண்டுகளை நிறைத்து வெள்ளிவிழாக் காண்கிறார்.

பழம்பெரும் கிறிஸ்தவக் கிராமமான சொறிக்கல்முனையைப் பிறப்பிடமாகக் கொண்ட அடிகளார், திரு. அருளன் இன்னாசி, திருமதி. செபமாலை இன்னாசி ஆகியோரின் புதல்வராவார். இவருக்கு இரண்டு பெண் சகோதரிகளும், ஐந்து ஆண் சகோதரர்களும் உள்ளனர்.

தமது ஆரம்பக்கல்வியை கல்முனை திருச்சிலுவை றோமன் கத்தோலிக்கப் பாடசாலையிலும், மேல்நிலைக் கல்வியை கல்முனைப் பாத்திமாக் கல்லூரியிலும் பெற்றுக்கொண்ட அடிகளார், தமது குருத்துவக் கல்விக்கான மெய்யியல், இறையியல் போன்றவற்றைத் தமிழ்நாடு திருச்சிராப்பள்ளி குருத்துவக் கல்லூரியில் பெற்றுக்கொண்டார். இளையோர் ஆற்றுப்படுத்தல், மறைக்கல்வி, குடும்ப ஆன்மீகம் போன்றவற்றில் இந்தியாவில் சென்னை மற்றும் பெங்களூர் போன்றவற்றில் சிறப்புப் பயிற்சிகள் பெற்றவர்.

1988ம் ஆண்டு ஜூலை மாதம் 28ந் திகதி குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்ட அருள்தந்தை இக்னேஸ் ஜோசப் அடிகளார், தமது முதற் திருப்பலியை சொறிக்கல்முனை திருச்சிலுவை ஆலயத்தில் நிறைவேற்றினார்.

புளியந்தீவு மரியாள் இணைப்பேராலயம், பெரிய கல்லாறு, கல்முனை, தாண்டவன்வெளி போன்றவற்றில் பங்குத் தந்தையாகப் பணியாற்றிய இவர், தற்போது சகாயபுரம் பங்கில் பங்குத்தந்தையாகப் பணியாற்றுகிறார். மறைமாவட்ட அளவிலும் மறைக்கோட்ட அளவிலும் சிறப்புப் பணிகள் பல ஆற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. 1990களில் கல்முனை மறைக்கோட்ட முதல்வராகவும் குடும்ப வாழ்வுப் பணி கல்முனை மறைக்கோட்ட இணைப்பாளராகவும் புனித வின்சன்ட் டி போல் சபை, மரியாயின் சேனை - கல்முனை கியூரியாவின் ஆன்மீக இயக்குனராகவும் பணியாற்றியுள்ளார்.


2006 வரையுள்ள காலப்பகுதிகளில் மட்டக்களப்பு மறைக்கோட்ட முதல்வராகவும், குடும்ப வாழ்வுப் பணி மறைமாவட்ட இயக்குநராகவும் பணியாற்றியுள்ளார். இக்காலப் பகுதிகளில் குடும்ப நல வாழ்வுக்காகவும் அன்பியம் மற்றும் மறைக்கல்வி போன்றவற்றின் வளர்ச்சிக்காகவும் பலதரப்பட்ட பணிகளை ஆற்றியுள்ளார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

மறைமாவட்டத்தில் திருச்சபையின் வளர்ச்சிக்காகவும் திருச்சபையின் மேம்பாட்டுக்காகவும் பல்வேறு பணிகளை ஆற்றியுள்ள அருட்தந்தை இக்னேஸ் ஜோசப் அவர்கள் தம் பணிவாழ்வில் வெள்ளிவிழாக் காணும் வேளையில் அவரை நெஞ்சார வாழ்த்திப் பாராட்டுவதோடு, அவர் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து, இறையாட்சி வளர பெரும்பணியாற்றிட இறையருள் வேண்டுகிறோம், வாழ்த்துகிறோம்!

**- இன்பம் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



இலக்கிய மடல்

- அமிர்தயான் -

# அப்பாவுக்கு ஒரு மடல்

அப்பா! சுமார் நாற்பது வருடங்களுக்குப் பின் இக்கடிதத்தை எழுதுகிறேன். நீங்கள் கந்தளாய் சீனித் தொழிற்சாலையில் வேலை செய்த காலத்தில், 'குவாட்டசில்' அம்மாவுடனும், தம்பிமாருடனும் இருந்தபோது நானும் தம்பியும் மற்றத் தங்கையும் ஏறாவூரில் அம்மம்மாவுடன் இருந்த காலத்தில்தான் கடிதங்கள் எழுதுவேன். அதுவும் நீங்கள் விலாசம் எழுதி, முத்திரையொட்டித் தந்து விட்டுப்போன என்வலப்புகளில்தான். அதன்பின் 'குவாட்டசை' விட்டு ஊரோடு எல்லாரும் வந்த பிற்பாடு ஒவ்வொரு வார இறுதி விடுமுறையிலும் நீங்கள் வீட்டுக்கு வருவதால் கடிதம் எழுதும் பழக்கம் அற்றுப்போய் விட்டது. அண்மைக் காலமாக எல்லாம் தொலைபேசி மூலந்தான். ஆனால், இன்று உங்களுக்கு எழுதும் கடிதம் நீங்கள் உயிரோடு இல்லாதபோது எழுதும் ஒன்று!

எங்களுக்கு விபரம் தெரிந்தநாள் தொடக்கம் மரணப்படுக்கையில் விழும் வரையில் ஒரே பகிடியும், நகைச்சுவையுந்தான். நீங்களும் சிரித்து, சுற்றிவர உள்ளவர்களையும் சிரிக்கவைக்கும் கலை எப்படியப்பா உங்களுக்கு வந்தது? ஆஸ்பத்திரியில் உங்களை அனுமதித்து, உணர்வுகள் படிப்படியாய் இழக்கும் தறுவாயில் கூட என் காதுக்குள் பகிடியொன்றை சொன்னீர்கள், "சுற்றிவர அல்கொய்தாவும், தலிபான்களும் ...." எனக்கொன்றும் விளங்கவில்லை; சுற்றும் முற்றும் பார்த்தபின்தான் விளங்கியது. அவரது கட்டிலின் இரண்டுபுற படுக்கைகளிலும் தாடிவைத்த இரண்டு அன்பர்கள் அனுமதிக்கப்பட்டிருந்தார்கள்.

உங்கள் கண்கள் சிவந்து கண்ணீர் சிந்தியதை இரண்டு தடவைகள்தான் கண்டுள்ளேன். ஒன்று எங்கள் குடும்பத்தில் நடந்த துயரச் சம்பவம்; மற்றது முள்ளிவாய்க்கால் படுகொலைகளைப்பற்றி பி.பி.சி. செய்தி சொன்னபோது. அதுவும் தலைமைத்துவத்தின் மரணச் செய்தி கேட்டபோது....

நடுநிசி வேளையில் எழுந்து செபிப்பீர்கள்! ஒரு செபமாவது உங்களுக்காக இருக்காது! எல்லாம் ஏழு பிள்ளைகளுக்காகவும், இயேசுவை அறியாத மக்களுக்காகவும் அடக்கப்பட்ட மக்களின் விடியலுக்காகவும் மட்டுந்தான்.

உங்களைப் பார்த்து நாங்கள் இரண்டு வகையான பழக்கங்களைக் கற்றுக்கொண்டோம். ஒன்று, எப்படி நடக்க வேண்டும் என்று; இரண்டு, வாழ்க்கையில் எப்படி நடக்கக் கூடாது என்று.

முன்பெல்லாம் நீங்கள் நன்றாகக் குடிப்பீர்கள்; நன்றாகப் புகைப்பீர்கள்; எல்லாம் 'பிரிட்டிஸ் நேவியில்' இருந்தபோது ஏற்பட்ட பழக்கம் என்றீர்கள். ஆனால், தொண்ணூறுகளின் ஆரம்பத்தில் அவற்றை நிறுத்திவிட்டீர்கள். "ஏன்...." என்று கேட்டேன். "என் பிள்ளைகள் வளர்ந்து நல்ல நிலையில் உள்ளார்கள்... அவர்களின் மரியாதைக்குப் பங்கம் வரக்கூடாது" என்றீர்கள். மனமாற்றம் என்பது ஒரு செக்கனில் கூட ஏற்பட்டுவிடும். "நான்கு, இரண்டு ரூபாய்க் குற்றிகள் கொடுத்து ஒரு சிகரட் வாங்கினேன். சிகரட்டைவிட குற்றி பாரம் அதிகமாய் இருந்தது. பிழை விடுவதாக உணர்ந்தேன். புகைப்பதை விட்டு விட்டேன்" என்றும் சொன்னீர்கள்.

20 மே 2013 காலை 7.15 மணியளவில் எங்களைவிட்டுப் பிரியும்போது உங்கள் வயது எண்பத்தேழைத் தாண்டி விட்டது. எண்பத்தாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வயதுவரை செங்கலடிக்கு மிதிவண்டியில் சென்று வருவீர்களே! அது எப்படியப்பா சாத்தியம்! கஷ்டங்கள் எங்களுக்குப் புதுமையல்ல. சைக்கிளையும் பிளாஸ்ரிக் கூடையையும் எடுத்துக்கொண்டு புறப்பட்டுச் சென்றீர்களென்றால், கூடை நிறையச் சாமான்கள் கொண்டுவந்து நீங்களே சுவையாய்ச் சமைப்பீர்களே! அதை மறக்க முடியுமா அப்பா? எண்பத்தேழு வயதிலும் எங்களுக்கு உங்கள் கையால் சமைப்பீர்களே! என் பிள்ளைகள் அதாவது உங்கள் பேரப் பிள்ளைகள் உங்கள் சாப்பாட்டைச் சாப்பிட ஓடிவருவார்களே! எவ்வளவு சந்தோசமாய் அன்னமிடுவீர்கள்.

'சிறிமா'வின் ஆட்சிக் காலத்தில் நாங்கள் வளவெல்லாம் மரவள்ளித் தோட்டம் போட்டோம். சில பாத்திகளில் கிழங்கே இருக்காது. இரகசிய மாய்க் கிழங்கைத் தோண்டி பிடுங்கி 'டேஸ்ட்'க்காக பொரித்துவிட்டு எங்களிடம் அசடு வழியச் சிரிப்பீர்களே! அந்த அழகை இனி எம்மால் காண முடியாதப்பா.

இந்தியப் படைகள் சுற்றி வளைக்கும் போதெல்லாம் உங்கள் 'நேவி' அடையாள அட்டையைக் காட்டி எம்மையெல்லாம் காப்பாற்றியதை மறக்கவில்லையப்பா...! மேஜர் ஒருவர் "நீங்கதான் அவர்களுக்கு ரெயினிங் கொடுப்பதா....?" என்று கேட்டதற்கு, என்ன சொல்வதென்று புரியாமல் சங்கடப்பட்டீர்களே! அதைப் பார்த்து நாங்கள் கேலி பண்ணியதை நாம் எப்படியப்பா மறப்போம்?

என் அம்மப்பாவையும், என் மாமனாரையும் நோய்வாய்ப்பட்டபோது தூக்கி குளிப்பாட்டி, 'கக்கா' கழுவி சுத்தம் செய்வீர்களே! அந்த வாய்ப்பை எங்களுக்குத் தராமல் சென்றுவிட்டீர்களே!

மருமக்கள் மீது பிள்ளைகளை விட பாசம் காட்டுவீர்களே அப்பா!

கல்முனை பற்றிமாக் கல்லூரி பெண்கள் பிரிவின் காணியின் ஒரு பகுதி தங்கள் அப்பா கொடுத்தது என்று சொல்லிப் பெருமைப்படுவீர்களே! மறைமாவட்ட ஆயர்களிடம் அன்பாய் இருந்தீர்களே!

இன்னும் எவ்வளவோ உங்களைப்பற்றிச் சொல்லலாம் அப்பா! இடம் போதாது.

என்றும் நீங்கள் எங்கள் Hero!
அத்துடன் ஓர் இமயம்.

**- இவ்வண்ணம் -**
**அன்புப் பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள் சார்பில்.....**
**- அன்புடன் ஆழியோன் -**

# தனிநாயக அடிகள் நூற்றாண்டு விழாச் சிறப்பிதழ்



தமிழ்த்தூது தமிழ்த்தூது தனிநாயக அடிகளின் நூற்றாண்டு விழா உலகெங்கும் தமிழர் வாழும் இடமெல்லாம் கொண்டாடப்பட்டு வருகிறது.
தனிநாயகம் அடிகளாரின் தன்னிகரில்லாப் பெரும்பணியை கௌரவிக்கும் வகையில் ஆகஸ்ட் - செப்டம்பர் மாதங்களை இணைத்து தொண்டன் சிறப்பு மலராக மலரவிருக்கிறது.
சிறப்பு மலரைச் சிறப்பிக்க எழுத்தாளர்களிடமிருந்து தரமான படைப்புகளை எதிர்பார்க்கிறோம். அடிகளாரின் வரலாறு, பயணம், பணிகள், ஆய்வு முயற்சிகள், வெளியீடுகள், உரைகள், சுவையான தகவல்கள் மற்றும் இன்னோரன்ன விடயங்களைக் கொண்ட ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன.
சுருக்கமாக எழுதுங்கள்! சுவையாக எழுதுங்கள்!

**ஆக்கங்கள் வந்துசேரவேண்டிய இறுதி நாள்: 2013 ஜூலை 15.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# பன்மைத்துவத்தின் பெறுமதியை உணராதவர்கள் மனநோயாளிகளே!

- அருள்தந்தை தமிழ்நேசன் அடிகள் -

இலங்கை பல்லின, பல்மத, பல்சமயங்களைக் கொண்ட ஒரு நாடு. இதையே 'பன்மைத்துவம்' அல்லது 'பன்முகத்தன்மை' என்று சொல்கிறோம். எல்லாமே ஒரே மாதிரியாக இருந்தால் அது அழகாக இருக்காது. 'Variety Makes Beautiful' என்று சொல்வார்கள். அதாவது ''வித்தியாசமானவை, வெவ்வேறானவை எப்போதும் அழகானவை.'' இந்தப் பன்முகத்தன்மையின் அழகை, பெறுமதியை உணராதவர்கள், மதிக்கத்தெரியாதவர்கள் உண்மையில் மனநோயாளி களே என அருட்திரு தமிழ் நேசன் அடிகளார் குறிப்பிட்டார். அண்மையில் (11.05.2013) கொழும்பு மாளிகாவத்தையில் அமைந்துள்ள சிறிலங்கா இஸ்லாமிய நிலையத்தில் இடம்பெற்ற மனிதத்துவம் தொடர்பான கலந்துரையாடலில் கலந்துகொண்டு கருத்துரை வழங்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது, உலகின் சகல நாடுகளிலும் பல்வேறுபட்ட மதங்களைப் பின்பற்றுபவர்கள், பல்வேறுபட்ட கொள்கைகளை உடையவர்கள், பல்வேறுபட்ட மனோபாவங்களைக் கொண்டவர்கள், வெவ்வேறு விதமான கலாசாரங்களைச் சேர்ந்தவர்கள் வாழ்கின்றனர். இலங்கையும் இதற்கு விதிவிலக்கல்ல. இலங்கையின் புவிப்பரப்பளவு சிறியதாயினும் இங்கும் பல இன, மத, சாதி, பிரதேச, கொள்கை கொண்டவர்கள் வாழ்கின்றனர். இந்தப் பன்முகத் தன்மையை (Pluralism) ஏற்றுக்கொள்ளாதவர்களால்தான் கடந்த காலத்தில் இந்த நாட்டில் பல மோதல்கள் ஏற்பட்டன. இவர்களின் அண்மைக்கால செயற்பாடுகள், கருத்துகள் மேலும் பல இன, மத மோதல்களுக்கு வழிகோலப்போகின்றன.

தீய எண்ணங்களை உடையவன் தான் வாழும் சமூகத்திற்கு ஒரு நோய்க்கிருமியாகவே இருக்கின்றான். நாம் எந்த மதத்தை, எந்த இனத்தை, எந்தக் கொள்கையைச் சேர்ந்தவராகவும் இருக்கலாம். நாம் எப்போதுமே மற்றவர்கள் மட்டில் சந்தேகத்தையும், ஆத்திரத்தையும், பொறாமையையும் கொண்டிருந்தால் நாம் குணப்படுத்த முடியாத ஒரு தீவிர நோயினால் பாதிக்கப்பட்டிருக்கின்றோம் என்பதே அதன் பொருளாகும். நமது உடலுக்கு ஏற்படும் நோயினால் அதிகம் பாதிப்பும் நட்டமும் ஏற்படுவது நமக்குத்தான், பிறருக்கு அல்ல. ஆனால், உளரீதியாக நமக்கு ஏற்படும் நோய் காரணமாக நம்மைவிட நம்மைச் சூழ உள்ளவர்களே அதிகம் பாதிப்படைவார்கள். அதாவது தீய எண்ணங்களை உடையவன் தான் வாழும் சமூகத் திற்கு ஒரு நோய்க்கிருமியாவான்.



நற்குணமுள்ள ஒருவர் ஆரோக்கியமும் சக்தியும் உள்ள ஒருவருக்கு ஒப்பாவார். அவரால் அவருக்கு ஏற்படும் நன்மையைவிட அதிக நன்மை அவரு டைய சமூகத்திற்கே ஏற்படுகின்றது. அவர் அந்த சமூகத்திற்கு ஒரு 'கொடையாக', 'அருளாக' விளங்குவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பெரிய புல்லுமலை திருச்செபமாலை

## திருத்தலத்தை நோக்கிய பாத யாத்திரை

பெரிய புல்லுமலை திருத்தலத்தை நோக்கிய பாதயாத்திரை முன்னர் வருடாந்தம் நடைபெற்று வந்த ஒரு நிகழ்வு. முப்பது வருட யுத்தம் காரணமாக பெரிய புல்லுமலையில் வாழ்ந்துவந்த மக்கள் முற்றுமுழுதாக இடம்பெயர்ந்ததன் நிமித்தம் இந்தப் பாதயாத்திரையும், திருச்செபமாலை மாதாவின் திருவிழாவும் பல்லாண்டுகளாக இடம்பெற சந்தர்ப்பமின்றிப் போய்விட்டது. புனர்நிர்மாணம் செய்யப்பட்ட ஆலயத்தில், ஆயித்தியமலை - பெரிய புல்லுமலை திருத்தலங்களை ஒரே பணித்தளமாகப் பொறுப்பேற்ற அருள்பணி சூ. டக்ளஸ் ஜேம்ஸ் அவர்களின் பெரு முயற்சியோடும், புல்லுமலையிலிருந்து இடம்பெயர்ந்து மட்டக்களப்பின் பல பணித்தளங்களில் பரவிவாழும் பொதுநிலையினர் பலரின் பங்களிப்போடும், 2012ம் ஆண்டு நீண்ட இடைவெளிக்குப் பின் திருச்செபமாலை அன்னையின் திருவிழாக் கொண்டாடப்பட்டது. கடந்த ஆண்டு 18.05.2012ல் மிகக் குறைந்த எண்ணிக்கையிலான பக்தர்களின் பங்குபற்றுதலோடு பாதயாத்திரையும் இடம்பெற்றது.

ஒரு வருட இடைவெளியில் மீண்டும் இவ்வாலயத்தின் திருவிழா, பாதயாத்திரை என்பன திட்டமிட்ட முறையில் ஒழுங்குசெய்யப்பட்டு கடந்த 05.05.2013ல் திருவிழா சிறப்புற முன்னெடுக்கப்பட்டது. இந்த வளர்ச்சிக்கு 2012ல் பணிபுரிந்த அதே பங்குத்தந்தை இடமாற்றத்துக்கு உள்ளாக்கப்படாமல் இருந்தமையும், புல்லுமலையிலிருந்து இடம்பெயர்ந்தும் இன்னும் அங்கு மீளக் குடியமராவிட்டாலும், அன்னைமீது கொண்ட ஈர்ப்பினால், பற்றால், தங்கள் தொழில்கள், குடும்பங்கள், பசி, தாகம், தூக்கம் மறந்தவர்களாய்ப் பாடுபடும் பொதுநிலையினர் பலரது கூட்டுமுயற்சியும், உழைப்பும் காரணம் எனலாம்.



மட்டக்களப்பு மறைமாவட்டத்தில் பல திருப்பயணங்கள் அனேகமானவை தவக்காலத்தை மையப்படுத்தி இடம்பெறுகின்ற போதிலும், பாதயாத்திரையாக இடம்பெறுபவை ஆயித்தியமலை திருத்தலத்தை நோக்கியதான பாதயாத்திரையும், (செப்ரம்பர் மாதத்தில்) புல்லுமலை திருச்செபமாலை திருத்தலத்தை நோக்கியதான பாதயாத்திரையும் (மே மாதத்தில்) என ஈண்டு குறிப்பிட்டாக வேண்டும்.

இதில் புல்லுமலை நோக்கியதான பாதயாத்திரையே அதிக தூரத்தையும் காட்டுவழியை ஊடறுத்தும், இரவிரவாக நடந்து கடக்கும் ஒன்றாகவும் இருக்கிறது. மட்டக்களப்பில் இருந்து புல்லுமலை சுமார் 30 மைல்கள். ஏறக்குறைய 50 கிலோமீட்டர்கள். பிற்பகல் 4.00 மணிக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media


- யோ. பத்திநாதன் -



மட்/புனித மரியாள் பேராலயத்தில் இருந்து புறப்பட்டு மறுநாள் காலை 7.00 மணிக்கு புல்லுமலை திருத்தலம் சென்றடையக் கூடிய விதத்தில் 15 மணிநேர பாதயாத்திரை யாக 6 தாக சாந்தி தரிப்பிடங்களுடன் தலா 30 நிமிட ஓய்வுடனும் இது திட்டமிட்டு நடை முறைப்படுத்தப்பட்டது. கடந்த வருடத் தோடு ஒப்பிடுகையில் பாதயாத்திரையில் பங்கெடுத்தோரின் எண்ணிக்கையில் பாரிய அதிகரிப்புக் காணப்பட்டது.

அருள்தந்தையர்கள் பலர் பாதயாத்தி ரையில் பங்களிப்புச் செய்ததைக் குறிப்பிட்டேயாகவேண்டும். மறை மாவட்ட மறைக்கல்வி இயக்குனர் அருள்பணி T. யூலியன் அவர்கள் ஆரம்பம் முதல் தன்னாமுனை ஆலயம் வரையிலும், தன்னாமுனை தொடக்கம் செங்கலடி ஆலயம்வரை தன்னாமுனை அருள்பணியாளரும் அவரது பங்குமக்களும் யாத்திரிகர்களாகக் கலந்துகொண்டதோடு குறித்த இடைத்தூரத்தில் பாடல்களை இசைத்ததும் செப வழிபாடுகளைச் செய்ததும் சிறப்பாக இருந்தது. செங்கலடியில் இருந்து கரடியனாறுவரை செங்கலடி அருட்பணியாளரும் அவரது குழுவினரும் ஒலிபெருக்கி பொருத்திய ஜீப் வண்டி சகிதம் யாத்திரிகர்க ளுக்கு முன்பாகச் செபித்தும், பாடல்களைப் பாடியும், ஒவ்வொரு காரணிக்கம் முடிவிலும் மரியாளைப் பழித்துரைக்கின்ற சபையார்கள் தெரிவிக்கும் காரணங்களுக்குத் தர்க்க ரீதியான விளக்கங்களை வழங்கியும் செபமாலையில் வழிநடத்திச் சென்றமை ஆனந்தம் அளிப்பதாக இருந்தது. கரடியனாறு தொடக்கம் திருத்தலம் வரை ஓர் அருட்சகோதரர் வருகைதந்த வேளையில் அருள்பணி பிலிப் அவர்கள் வழியில் யாத்திரிகர்களோடு கலந்து யாத்திரிகர்களுக்கு உற்சாகமூட்டினார்.


காலை 6.45 மணியளவில் திருப்பவனி ஆலயத்தைச் சென்றடைந்தது. தங்களது காணிக் கைகளை யாத்திரிகர்கள் அன்னைக்குச் செலுத்தி னார்கள். காலை 7.15 மணிக்கு யாத்திரிகர்களுக் கான விசேட திருப்பலியும், ஆசீரும் இடம்பெற்றன. யோசேப்பிற்குக் கனவில் தெரிவிக்கப்பட்ட "மரியாளை ஏற்றுக்கொள்ள அஞ்சவேண்டாம்" என்ற தொனிப் பொருளில் மறையுரை ஆற்றப்பட்டதால் யாத்திரிகர் களும் வாழ்வில் 'மரியாளை ஏற்றுக்கொள்ளத் தயங்க மாட்டோம்' என்ற வாக்குறுதியை அளித்தவர்களாய் ஆத்ம திருப்தியோடு திருத்தலம் நின்று புறப்பட்டார்கள்.



குறும்(பு)பா — 115

உனைத்தேடி உலகெல்லா மலைந்தேன்
ஓய்ந்தபோ தமதருகை உணர்ந்தேன்
எனக்குள்ளே நீயிருந்து எனையாளு மதிசயத்தை
என்னென்பேன் இதுதானோ நீ

~ மலர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தமிழில் கிறிஸ்தவ இலக்கியங்கள்....

றூபி வலன்ரினா பிரான்சிஸ்
முதுநிலை விரிவுரையாளர், மொழித்துறை,
கிழக்குப் பல்கலைக்கழகம்

## இரட்சணிய மனோகரம்

சென்ற இதழ் தொடர்ச்சி .....

பாவியாகி மனம் போன போக்கில் வாழ்ந்து இறைவனை நினையாது வாழ்ந்த வாழ்க்கைக்காக இரங்கி கொடிய பாவியாகிய தனக்கு அருள் செய்த இறைவனின் கருணையை நினைந்து உருகுவனவாக அமைந்துள்ள பாடல்கள் பக்திச் சுவை மிக்கனவாய் அமைந்துள்ளன. உதாரணம்:

நில்லாது காயமிது புல்லாகுமென்று நான்
நினையாது போன போக்கில்
நெஞ்சத்தை விட்டென்னை வஞ்சித்து நீ தந்த
நியமத்தையும் கடந்து
செல்லாத வழியூடு சென்று நான் மதி கெட்டுத்
திரிந்தயரு நாளில் உனது
திவ்விய கடாட்சமுற உன் தஞ்சமாய் வந்த
தீய சண்டாளனேனை
எல்லாரிலும் கொடிய பொல்லாத பாவியென்று
எள்ளாது திருவுளத்தே
எனையுமொருபொருளாய் மதித்துஅடிமையாக்கின உன்
ஏராளமான அன்பை
பல்லாயிரங் கோடி நாக் கொண்ட புகழினும்
பகருதற்குஎளிதாகுமோ?
பக்த ஜன பரிபால நித்யமவரனுகூல
பரமார்த்த பரம நிதியே

என்பதில் யாக்கையின் நிலையாமையைக் கருத்திற் கொள்ளாமல் மனம் போன போக்கில் வாழ்ந்துகெட்டழிந்த பாவியாகிய தன்னை பாவி என்று இகழாமல் தனக்குரியவனாக ஏற்றுக் கொண்டு அருள்புரிந்த இறைவனை பல்லாயிரம் நாக் கொண்டு புகழ்ந்தாலும் போதாது என இரங்கும் பக்தனின் உள்ளத்தைக் காணலாம்.

பின்வரும் பாடல் இயேசுக் கிறிஸ்துவின் புகழைப் பறைசாற்றுவது.

அன்பு மயமே கருணையானந்த வாரியே
அருள்பொழி மழைக் கொண்டலே
ஆருயிர்க் குயிரான அமிர்த சஞ்சீவியே
அடியரித யாம்பரத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இன்புற வுதித்திலகு மெய்ஞ்ஞான பானுவே
ஏத்தருஞ் சுகுண நிதியே
இதரசமயாதீத நிலையமே வானிழிந்து
இம்பர் வரு ஜீவ நதியே
மன்பதை புரக்க நடு நின்றோங்கு ரட்சணிய
மாமேருவே என்று நின்
வண்புகழ் வழுத்தி மெய் யன்பினோடு சிந்தைபர
வசமாகி யாவியனல்கொண்டு
என்புருகி ஆனந்த பாஷ்பஞ் சொரிந்துநின்று
ஏத்தஅருள் ஈவ தென்றோ?
ஏக நாயக சருவலோக நாயக கிறிஸ்து
இயேசு நாயக ஸ்வாமியே

கருணைக் கடல், மழை மேகம், உயிர் தரும் சஞ்சீவி, மெய்ஞான சூரியன், ஜீவநதி, இரட்சணிய மாமலை எனப் பலவாறு இயேசுக் கிறிஸ்து புகழப்படுகின்றார்.

பிழை நினைந்திரங்கல் என்னும் பகுதியில் அமைந்துள்ள பாடல்களும் மனதை உருக்குவனவாய் அமைந்துள்ளன.

சுத்தனோ அல்லன் நன்மை சொல்ல எள்துணையுமில்லேன்
பித்தனான் பெரிய பாவி பிழைக்குமாறு உணர மாட்டென்
நித்த நீயருளுமிவை நினைக்கிலேன் அன்றியீனம்
எத்தனை?
இறைவனே யானென் செய்வான் தோன்றினேனே
எனவும்

கதிரொளி மறையப் பூமி கம்பிக்கச் சிமையங் கீறிப்
பிதிர்படச் சிலுவைமீது பெருந்தகை குருதி சிந்தி
வதைபடு திருக்கோலத்தை மனக்கணால் தரிசித்தேத்தி
இதைய நெக்குருகுகில்லேன் என்செய்வான் தோன்றினேனே

இப் பாடல்களில் தன்னிலைக்காக இரங்குவதுடன் இயேசுக் கிறிஸ்துவின் பாடுகளை நினைந்துருகும் பக்தனின் உள்ளத்தையும் காணலாம். இதே போன்று 'நெஞ்சொடு கிளத்தல்' என்னும் பகுதியும் அமைந்துள்ளது.

தனு கரணங்கள் ஓய்ந்து தளர்ந்து மூச்சொடுங்கு காலை
மனை மகார் துணையாவாரோ? மருங்கிருந்த முவதல்லால்
அநவரதமும் உனக்கோராந்துணை விரும்பின் இன்னே
மனுவுருவாய யேசு மலரடி வணங்காய் நெஞ்சே

ஐம்புலன்களும் ஒடுங்கி உயிர் மூச்சு அடங்கும் போது மனைவி மக்கள் துணையாக வர மாட்டார்கள். அருகிலிருந்து அழுவதை மட்டுமே அவர்களால் செய்ய முடியும். நெஞ்சே நீ நித்தியமான துணையை விரும்பினால் இயேசுவின் மலரடிகளை வணங்குவாயாக என அப் பாடலில் குறிப்பிடப் படுகின்றது.

**- தொடரும் ......**

## பணியாளர் எம். ஞானப்பிரகாசம் காலமானார்

*திருகோணமலை பாலையூற்றைப் பிறப்பிடமாகக் கொண்ட ஞானப்பிரகாசம் அவர்கள் தமிழ்நாடு திண்டிவனத்தில் பயிற்சிபெற்ற மறையாசிரியராவார். பல்வேறு காரணங்களால், மறையாசிரியர் பணியிலிருந்து தம்மை விடுவித்துக்கொண்ட அவர், திருகோணமலை புனித மரியாள் பேராலயத்தில் பணியாளராகக் கடமை புரிந்தார். பின்னர் மட்டக்களப்பு ஆயர் இல்லத்தில் பணிபுரிந்த அவர் தமது இறுதிக் காலத்தை முதியோர் இல்லத்தில் கழித்தார். எளிமையும் பணிவும் அடக்கமும் மிக்கவராக வாழ்ந்த ஞானப்பிரகாசம் அவர்கள் கடந்த ஜூன் மாதம் 2ம் நாள் இறையடி சேர்ந்தார். அவரது இறுதிக் கிரியைகள் ஜூன் மாதம் 4ம் திகதி முதியோர் இல்லத்தில் நடைபெற்றது.*

*அன்னாருக்கு நித்தியவாழ்வையும் நீடித்த அமைதியையும் இறைவன் அருள்வாராக!* ✷

**குறும்(புப்)பா - 116**

**மூக்கறுந்து போனாளாம் மூளி**
**மூட்டிக்கோள் கெடுக்குமந்தக் காளி**
**போக்கிழந்து பிறர்குற்றம் குறைகூறிக் குதூகலிக்கும்**
**கொடியோர்கள் விழட்டும் ஆழி**

~ மலர் ~





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சிறுவர்களுக்கு மட்டும்

# விவிலியம் கற்போம் - 123

பரிசுப் போட்டி

முடிவுத் திகதி 31.07.2013

## இணைச்சட்டம் அதிகாரங்கள் 32-33

**(பொருத்தமான சொற்களைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக)**

இஸ்ரயேலர் அனைவரும் கேட்க மோசே பின்வரும் பாடலைப் பாடினார். "வானங்களே, நான் பேசுவேன்: செவிகொடுப்பீர். நான் ஆண்டவரின் பெயரைப் பறைசாற்றுவேன்: அவரே நம் ...................... . அவர் செயல் நிறைவானது. வஞ்சகம் அற்ற உண்மை மிகு இறைவன். நீதியும் மேன்மையும் உள்ளவர். அவர் தம் கேடுகெட்ட பிள்ளைகள் பொய்மையாய் நடந்தனர். இதுவா கைமாறு? பண்டைய நாட்களை நினைத்துப்பார். பல ...................... ஆண்டுகளைக் கவனித்துப்பார். ஆண்டவரின் பங்கு அவர்தம் மக்களே! இவரது உரிமைச் சொத்து யாக்கோபே! கண்ணின் மணியென அவனைக் காத்தார். ஆண்டவர் ஒருவரே அவனை வழிநடத்தினார்; வேற்றுத் தெய்வங்கள் அவனோடு ...................... ஆனால், கொழுத்த காளை மார்பிலே பாய்ந்தது. எசுரூன் கொழுத்துப் பருத்து முரடனானான். தன்னைப் படைத்த கடவுளை விட்டு விலகினான். தம் மைந்தரும், தம் மகளிரும் தமக்குச் சினமூட்டியதை, ஆண்டவர் கண்டு அவர்களை இகழ்ந்து ...................... . எனவே, அவர் அவர்களது அழிவுநாள் நெருங்கியுள்ளது என்றார். வேற்றினங்களே! ஆண்டவரின் மக்களோடு மகிழுங்கள்: அவர் தம் ஊழியரின் இரத்தத்திற்குப் பழிவாங்கினார். அவர் தம் பகைவர்களுக்குப் பதிலடி கொடுத்தார். தம் மக்களின் ...................... கறை நீக்கம் செய்தார். மோசேயும் நூனின் மகனான யோசுவாவும் இப்பாடலின் வார்த்தைகளை மக்கள் கேட்குமாறு எடுத்துரைத்தனர். இதன்பின் மோசே அவர்களுக்கு, "உங்களுக்குக் கூறியவற்றை உள்ளத்தில் இருத்துங்கள். அப்போதுதான் உங்கள் ...................... அவற்றைக் கடைப்பிடிக்கக் கட்டளையிடுவீர்கள். இந்த வார்த்தைகளால் நீடூழி வாழ்வீர்கள்" என்றார். அன்றே ஆண்டவர் மோசேயிடம் "கானான் நாட்டைப் பார். ஆரோன் ...................... எனும் மலையில் இறந்தான். நீ ஏறிச் செல்லும் மலையில் இறப்பாய். ஏனெனில், பாலைவனத்திலே நீ எனக்குத் துரோகம் செய்தாய். நீ அந்நாட்டினுள் செல்லமாட்டாய் என்றார். மோசே, இறக்குமுன் மக்களுக்கு ஆசி வழங்கி "ஆண்டவர் உண்மையாகவே, மக்களின் அன்பர். ...................... யாக்கோபினது கூட்டத்தின் உடைமை. ரூபன் வாழட்டும். ஆண்டவரே! யூதாவை அவன் மக்களிடம் சேரும். பென்யமின் ஆண்டவரின் அன்புக்குரியவன். யோசேப்பின் நிலம் ஆண்டவரால் ஆசிபெற்றது. செபுலோனே நீ பயணம் செய்கையில் மகிழ்ந்திடு. ...................... கூடாரங்களில் நீ தங்கும்போது மகிழ்ந்திடு. காத்து பெருகுவான். தாண் பாசானினின்று பாய்ந்துவரும் சிங்கக்குட்டி. நப்தலி ஆண்டவரின் அருளன்பால் நிறைவுபெற்றவன். ஆசேர் எல்லாக் குலங்களிடையே ஆசிபெற்றவன். எசுரூனின் இறைவன்போல் எவருமில்லை. கடவுளே உனக்குப் புகலிடம். பகைவரை அழித்து ...................... காப்பார். இஸ்ரயேலே நீ பேறுபெற்றவன். ஆண்டவரால் மீட்கப்பட்ட மக்களினமே! உன்னைக் காக்கும் கேடயமும் உன் வெற்றிவாளும் அவரே! உன் பகைவர் உன் முன் கூனிக் குறுகுவர். அவர்களின் தொழுகை மேடுகளை நீ ஏறி மிதிப்பாய்" என்று கூறினார்.

**விடைகள்:** **ஒதுக்கினார், மக்களை, பாறை, ஓர், இஸ்ரயேலை, இசக்காரே, திருச்சட்டம், இருந்ததில்லை, நாட்டை, தலைமுறையின்**

(வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும், பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அறிவை வளர்ப்போம் - 123

## பரிசுப் போட்டி




**(பொருத்தமான சொற்களின் கீழ் அடிக்கோடிடுக)**

1. பூமியின் மேற்பரப்பில் அதிகம் உள்ள உலோகம்
   (சிலிக்கன் - இரும்பு - காரீயம்)

2. டிப்தீரியா நோய் பாதிக்கும் உறுப்பு
   (தொண்டை - கண் - இருதயம்)

3. தண்டநாயக்கர் என்று அழைக்கப்படுபவர்
   (கப்பற் தலைவர் - தண்டு வளப்போர் - தாண்டித் தாண்டி நடப்போர்)

4. களனி கங்கையில் அமைந்துள்ள மின்நிலையம் ஒன்று
   (காசல்றீ - விக்டோரியா - பம்பரகந்தை)

5. 'பாம்பைக் கண்டால் ..........................'
   (படையும் நடுங்கும் - போற்றி வணங்கு - பக்கத்தில் போகாதே)

6. 'செவ்வாழைக் கால்' என்பது
   (உவமைத் தொகை - உருவகம் - விபரீத அணி)

பெயர் : ..........................................................................................

முகவரி: ..........................................................................................

..........................................................................................

அனுப்பவேண்டிய முகவரி:
விவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம்– 123
தொண்டன்
அ. பெ. எண் – 44
மட்டக்களப்பு.

பரிசு அனுப்பவேண்டிய தபாலகம்:

..................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# போட்டி முடிவுகள்...

## விவிலியம் கற்போம் - 121 விடைகள்

தூய, உயிர், கப்பல்களில், எகிப்து, நாற்பது, செபோயிம், உடன்படிக்கையை, தெய்வங்களுக்கு, பாசானி, சீற்றம்

## அறிவை வளர்ப்போம் - 121 விடைகள்

1. தவத்திரு தனிநாயகம் அடிகள் 2. கிரீன்லாந்து 3. வெள்ளி
4. சப்ரகமுவா மாகாணம் 5. சுளகு படக்கு படக்கெண்டுமாம் 6. அன்மொழித்தொகை

**பரிசுகள் - அனுசரணை: அருள்தந்தை. அன்ரனி குரூஸ் CRS**

**போட்டியின் இரு பிரிவுகளுக்கும் சரியான விடைகளை எழுதி 300/= பரிசு பெறுவோர்**

- றொ. தனுஸ்டன்,
  இல. 32, சித்திவிநாயகர் வீதி,
  அமிர்தகழி, மட்டக்களப்பு.
- S. அன்டன் றொமேஸ்,
  மே/பா. சகாயம்,
  கோட்டகொட,
  ஸ்பிறிங்வெளி.

**ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடைகளை எழுதி 200/= பரிசு பெறுவோர்**

- இருதயநாதன் ஜெஸ்மின்,
  இல. 16, காசிநாதர் வீதி,
  பாலமீன்மடு, மட்டக்களப்பு.
- S. சில்வஸ்டன்,
  பொதுமைதான வீதி,
  சம்மாந்துறை.

**சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 73 முடிவுகள்**

- **முதலாம் பரிசு - 400/=**
  மெக்கன்சி ஸ்பெக்,
  பிரதான வீதி,
  வாழைச்சேனை.
- **இரண்டாம் பரிசு - 300/=**
  ஜோன் ஜிதேசன் ஜெயராஜ்,
  இல. 65/2, திருச்செந்தூர்
  முருகன் கோவில் வீதி,
  கல்லடி, மட்டக்களப்பு.
- **மூன்றாம் பரிசு - 200/=**
  எஸ். ஹரிசாந்த்
  59/8, மணற்சேனை வீதி,
  கல்முனை.

போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி. (ஆ - ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



மட்டக்களப்பு சமூகத் தொடர்பு நிலையமும் கிறிஸ்தவ கலை இலக்கிய பேரவையும்
இணைந்து நடாத்திய நூற்றாண்டு விழாக் காணும்
தமிழ்த்தூது தனி நாயகம் அடிகள் நினைவுக் கருத்தரங்கு நிகழ்வுகள்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org